பக்கங்கள் 24

# உதயன்

காலநிலை
அதிக மழைவீழ்ச்சி காணப்படும்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 360 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 5, வெள்ளி 21.11.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*



# பொதுவேட்பாளர் மைத்திரிபால

## சந்திரிக ா குமாரதுங்க முக்கிய பங்கை வகிப்பார்

யாழ்ப்பாணம், நவம்பர் 21
ஜனாதிபதித் தேர்தலுக்கான எதிரணியின் பொது வேட்பாளர் முடிவாகியுள்ளது. இது தொடர்பில் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து கட்சி தாவவுள்ள மைத்திரிபால சிறிசேனாவே எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக இன்று அறிவிக்கப்படுவார் என்று நம்பகமாகத் தெரியவருகின்றது. முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தராக இருந்தவருமான சந்திரிகா பண்டார நாயக்கா பிரதானமான பங்கை இதில் வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ❖19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது

### சுபநேரத்தில் கையெழுத்திட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



யாழ்ப்பாணம், நவ. 21
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுப நேரமான நேற்று பி.ப. 1.17 மணிக்கு கையொப்பம் இட்டார். உடனடியாகவே அதிவிசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்டது.
❖22 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்



யாழ்ப்பாணம், நவ. 21
என்னுடைய போட்டி வேட்பாளரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்ட பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே - அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"என்னோடு போட்டியிடப்
❖22 ஆம் பக்கம் பார்க்க

## மனுத்தாக்கல் திகதி இன்று அறிவிக்கப்படும்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
ஜனாதிபதித் தேர்தலுக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பிலான வர்த்தமானிப்
❖19 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீ.சு.க. வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவே

### கட்சிக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 21
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிப்பது என்று ஏகமனதாக, கட்சி
❖19 ஆம் பக்கம் பார்க்க

## வாக்களிக்கும் தகுதி உங்களுக்கு உண்டா?

யாழ்ப்பாணம், நவ. 21
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க நீங்கள் தகுதியானவரா?. அதனை 1919 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைப்பை எடுத்து அறிந்து கொள்ள முடியும்.
❖22 ஆம் பக்கம் பார்க்க

## நீதிபதிக்கு முன்பாகவே சகாவுக்கு கஞ்சா பொதி

### சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் வசமாகச் சிக்கிக் கொண்டார்

யாழ்ப்பாணம், நவ. 21
வழக்குக்குச் சென்றிருந்த சந்தேகநபர் ஒருவர் நீதிவான் முன்னிலையிலேயே எதிரிக் கூண்டில் வைத்து கஞ்சாப் பொதியை சகாவுக்கு வழங்கியபோது வகையாக மாட்டிக் கொண்டார். அவரைப்
❖22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரின் அழுகுரல் காதில் விழாதோ?



❖ 02 ஆம் பக்கத்தில் விரிவான செய்தி

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### புலம்பெயர் நாடுகளில் உணர்வுடன் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
மாவீரர் வாரம் இன்று முதல் தமிழர்கள் வாழும் தேசங்கள் எங்கும் உணர்வெழுச்சியுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப் படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால், போரில் சமராடி மடிந்த வீரர்களை நினைவுகூர்வதற்காக ஒரு வார காலம் மாவீரர் வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1989 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.
தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்கும்வரையில் மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன்
❖ 19 ஆம் பக்கம் பார்க்க



## கஞ்சா கடத்திய இந்தியருக்கு பிணை

யாழ்ப்பாணம், நவ. 21
இந்தியாவிலிருந்து சுமார் 102 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளைப் படகில் இலங்கைக்கு கடத்திய குற்றச்சாட்டில் யாழ்.
❖19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் கொன்று எரித்தவர்களின் எச்சத்தை தேடுகிறதாம் பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ.21
தமிழீழ விடுதலைப் புலிகளால் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டவர்களின் எச்சங்களைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் புலனாய்வாளராக இருந்த ஜெயரட்ணம் உள்ளிட்ட 80 பேர் இவ்வாறு எரிக்கப்பட்டனர் என்று கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
❖19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் நாடு திரும்பினர்

யாழ்ப்பாணம், நவ.21
போதைப் பொருள் கடத்திய குற்றத்துக்காக கொழும்பு மேல்நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட தமிழக
❖22 ஆம் பக்கம் பார்க்க

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக் கூடாது"
-தமிழகக் கவிஞர் அறிவுமதி



வவுனியாவில் கடந்த இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக பிரதான வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வவுனியா பண்டாரிக்குளம் வீதி . வவுனியா மன்னார் வீதி மற்றும் ஏனைய வீதிகளில் நீர் தேங்கியுள்ளது. உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு நீரை வெளியேற்றுவதற்கு முடிந்தளவு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார். (ந-421)

# மரம் கடத்தியோர் கூலருடன் கைது

வவுனியா, நவ.21
கூலர் வாகனத்தின் மூலம் பெறுமதி மிக்க மரங்களைக் கடத்த முயன்றவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய ஊடகப் பிரிவினர் தெரிவித்துள்ளதாவது:-
"நேற்று முன் தினம் இரவு ஈச்சம் குளம் பகுதியில் இருந்து பெறுமதிமிக்க முதிரை வகை மரங்களை வெட்டி கூலர் ரக வாகனம் மூலம் கடத்த முற்பட்ட போது ஈச்சம் குளம் பொலிஸார் கூலர் வாகனம் சகிதம் 2 பேரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களும், வாகனமும் தற்போது வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கைதானவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பறிமுதல் செய்யப்பட்ட முதிரை மரங்கள் 10லட்சம் பெறுமதியானவை"- என்று தெரிவிக்கப்பட்டது.
அண்மைக்காலமாக வவுனியாவில் உள்ள பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் போன்ற பிரதேசங்களில் இருந்து விறகுக்கெனக் கூறப்பட்டு பெறுமதி மிக்க காட்டு மரங்களை வெட்டப்பட்டு வருகின்றன. அதையடுத்து வனவளதிணைக்கள அதிகாரிகள் பொலிஸாரின் உதவியை நாடினர். பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இருவர், வாகனத்துடன் சிக்கியுள்ளனர். (ந-421)

# தீ விபத்து

கொழும்பு, நவ.21
அநுராதபுரம் வைத்தியசாலையின் 6 மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பேராசிரியர் பிரிவு என்ற கட்டடத்திலே இந்த தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
இந்த தீ விபத்துக் காரணமாக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரிவு மற்றும் எம்ஆர்.ஐ. ஸ்கான் பிரிவு என்பன சேதமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அநுராதபுரம் மாநகர சபை தீயணைப்பு பிரிவு, வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந)

# நீதிமன்றத்தின் விளக்கம் மக்களுக்கு தேவையில்லை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.21
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்று உயர்நீதிமன்றம் சட்டவிளக்கம் கொடுத்திருக்கிறது
எனவே உயர்நீதிமன்றத்தின் முழுமையான சட்டவிளக்கத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா? என்பது குறித்து உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை ஜானாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியிருந்தார். அதுகுறித்த உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கம் ஜனாதிபதிக்கே தெரியப்படுத்தப்பட்டது. பகிரங்கப்படுத்தப்படவில்லை.
இந்தநிலையில் உயர்நீதிமன்ற சட்டவிளக்கம் பொது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் கோரி வருகிறது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்



போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
குறித்த சட்டவிளக்கம் ஜனாதிபதிக்கே தெரியப்படுத்தப்பட்டது. எனவே அது பொதுமக்களுக்கு அவசியம் இல்லைஎன்று அமைச்சர் இன்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார். (ந)

# இலங்கைக்கு சந்தனக்கட்டை கடத்த முயன்றோர் கைது

தமிழ்நாடு இராமேஸ்வரத்தில்



இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 10 கிலோ நிறையுள்ள 6 சந்தனக் கட்டைகளுடன் 3 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மீனவர் குடியிருப்பு ஒன்றில் சந்தனக் கட்டைகளுடன் 3 பேர் தங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததை தொடர்ந்து பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்றவேளை - இருவர் தப்பியோடிவிட்டனர். அதனையடுத்து அங்கிருந்த 2 பேரையும் வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
விசாரணைகளின் போது குறித்த சந்தனக் கட்டைகள் படகு மூலமாக இலங்கைக்கு கடத்தவிருந்தன என்றும், கேரளாவில் இருந்து குறித்த சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்தனர் என்றும் கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-14)

# 'வழக்கு ஒன்று; தீர்ப்பு இரண்டா?' - மீனவர்களின் குடும்பங்கள் ஆர்ப்பாட்டம்









யாழ்ப்பாணம், நவ.21
போதைப் பொருள்களைக் கடத்தியமை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 8 மீனவர்களில், இந்திய மீனவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏனைய மூன்று மீனவர்களின் உறவினர்களும் நேற்று யாழ்.நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
யாழ்.மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் குருநகர் மற்றும் மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்கள் கடற்றொழில் சமாசத்தில் இருந்து ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் அலுவலகத்துக்கு பஸ்களில் பதாகைகளைத் தாங்கியவாறு வந்தடைந்தனர்.
கட்சியின் அலுவலகத்துக்கு முன்பாக யாழ்.ஸ்ரான்லி வீதிக்கு முன்பாக பிள்ளைகளுடன் மீனவர்களின் மனைவியர் மண்ணில் புரண்டழுதனர். தங்களுக்கு நீதி கிடைக்கும் வரை இந்த இடத்தில் இருந்து போகமாட்டோம் என சிறிது நேரம் வாகனங்களை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் வீதியில் போக்குவரத்து தடை ஏற்பட்டது.
"ஒரே வழக்கில்தான் இந்திய-இலங்கை மீனவர்கள் 8 பேருக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டது. எனினும் இந்திய மீனவர்களுக்கு மட்டும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியமீனவர்களுக்கு ஒரு தீர்வு இலங்கை மீனவர்களுக்கு வேறொரு தீர்வா? 3 வருடமாக பிள்ளைகள் அப்பாவைத் தேடுகிறார்கள். எங்களது குடும்பம் அன்றாடச் சாப்பாட்டுக்கு சொந்தங்களிடம் பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். 3ஆவது தடவையாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் எங்களுக்கு தீர்வு இல்லை." - மீனவர்களின் உறவுகள் கதறி அழுதனர்.
அதையடுத்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் மற்றும் வடக்கு மாகண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் தவராசா ஆகியோர் மீனவர்களின் குடும்பத்துடன் கலந்துரையாடினர். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு இது குறித்துத் தெரியப்படுத்தி, நியாயமான தீர்வு பெற்றுத் தருவதாக உறுதிமொழி வழங்கினர். (ந-14)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 05 வெள்ளி (21.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 360

## வவுனியாவில் படைகள் வைத்திருக்கும் காணிகளை விடுவிக்க வழி செய்யுங்கள்

### மாகாண சபை உறுப்பினர் மஹிந்தவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.21

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்து தருமாறும் அத்துடன் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளைச் செய்து தருமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வீட்டுத் திட்டம், வீதி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, இளைஞருக்கான வேலை வாய்ப்பு, கல்வி நடவடிக்கை, காணிகளை மக்கள் பாவனைக்கு கையளித்தல் என்பவற்றின் கீழ் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வீட்டுத் திட்டத்தின் கீழ், பழைய கற்பகபுரம், ஓமந்தை அரசன் குளம், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவேண்டும். பொன்னரசங்குளம், கந்தன்குளம், கற்குளம் பிரதேசங்களில் தேசிய

(22ஆம் பக்கம் பார்க்க)

## மாணவியை வன்புணர்வு செய்ய முயன்ற முதியவர் கைது

தென்மராட்சி, நவ.21

15 வயதுப் பாடசாலை மாணவியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற 65 வயது முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி நுணாவிலில் இடம்பெற்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இராணுவம் வெளியேற இந்தியாவின் அழுத்தம் வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிக்கை

கிளிநொச்சி, நவம்பர் 21

**வடக்கில் இராணுவம் வெளியேற இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

**ஆனையிறவில் நேற்றுக் காலை இரகசியமாக இடம்பெற்ற இராணுவத்தினருக்கான காணி சுவீகரிப்புக் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போருக்குப் பின்னர் தோன்றியிருக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக இது உள்ளது. வடக்கு மாகாணத்தில் 67 ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவம், கடற்படை, விமானப் படை என்பன தமது தேவைக்காகக் கையகப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. முழுமையாக அரசினுடைய ஒத்துழைப்புடன் அதிகாரிகளைக் கொண்டு காணிகளை அளந்து படைகளுக்கு வழங்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் எடுத்துக்கூறியுள்ள போதிலும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சர்வதேசம் நடந்துகொள்வதாகத் தெரியவில்லை.

குறிப்பாக தமிழர்களின் தாயகப் பகுதியிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டுமென்று இந்தியா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இராணுவம் வெளியேறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே பிற மாகா

(22ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கலைப்பீடம் தொடர்ந்து செயற்படும்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடம் வழமை போன்று - ஏற்கனவே திட்டமிட்டபடி தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு விடுமுறை அளிப்பதா என்று ஒரு சாராரால் கேள்வியெழுப்பப்பட்டு வந்த நிலையில், நேற்று அது தொடர்பிலான கலைப் பீடச் சபைக் கூட்டம் இடம்பெற்றது. அதில் கலைப்பீடம் தொடர்ந்து இயங்குவதற்கு அனைவரும் ஒருமித்து கருத்துகள் முன் வைத்திருந்தனர். அதன்படி கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

காலாண்டு, அரையாண்டு என ஒவ்வொரு முறையின் போதும் விடுமுறை வழங்குவது வழமை. ஆனால் இந்த முறை டெங்குத் தொற்றுக் காரணமாக 2 வாரங்கள் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அதனால் அந்தக் காலப்பகுதிக்குரிய கற்றல் செயற்பாடுகளுக்கு மாகத் தொடர்ந்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 19 ஆம் திகதி விடுமுறை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பீடங்கள் விடுமுறை

(22ஆம் பக்கம் பார்க்க)

## பொலித்தீன் பைகளால் டெங்கு பரவும் அபாயம்

### உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு மாகாண சுற்றுச் சூழல் அமைச்சரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.21

பொலித்தீன் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொலித்தீன் பைகளில் தேங்கி நிற்கும் மழை நீரால் உயிர்க் கொல்லி நோயான டெங்கு நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. எனவே மக்களின் பாதுகாப்புக் கருதி பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்திக் கடதாசிப் பைகளைப் பாவிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் ஓய்வு பெற்ற தபால் அதிபருமான ஆ.சி.கணேசவேல் வட மாகாண சுற்றுச் சூழல் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனைக் கோரியுள்ளார்.

இது குறித்து அமைச்சருக்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

## இரகசியமாக ஆனையிறவில் நேற்றுக் காணிகள் அளவீடு

கிளிநொச்சி, நவ.21

ஆனையிறவுப் பகுதியில் இரகசியமான முறையில் இராணுவத்தினருக்குக் காணி அளவிடும் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனையிறவில் நான்கு பேருக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் காணியை நேற்றுக் காலை 7 மணியளவில் இரகசியமான முறையில் நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்துள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி குறித்த காணிகளை இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிக்கும் வகையில் அளவீடு செய்ய் முற்பட்ட வேளை காணி உரிமையாளர்களும், பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அந்த முயற்சிகள் கைவிடப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வலி.மேற்குப் பிரதேச சபையால் 28 குடும்பங்களுக்குக் காணிகள்

### 18 குடும்பங்களுக்கு அடுத்த மாதம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 21

வலி.மேற்குப் பிரதேச சபைக்குரிய காணியில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகக் குடியிருந்த 28 குடும்பங்களுக்கு குறித்த காணி எழுதிக் கொடுக்கப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாதம் ஜனாதிபதி வடமராட்சிக்கு வருகிறார்

வடமராட்சி, நவ. 21

ஜனாதிபதி மஹிந்த அடுத்த மாதம் இரண்டாம் வாரமளவில் வடமராட்சிக்குப் பயணம் செய்ய இருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும், ஆனால் திகதி தற்போது தீர்மானிக்கப்படவில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பு எனக் கேள்வியுற்று திருவடிநிலையில் திரண்டனர் மக்கள்

யாழ்ப்பாணம், நவ.21

திருவடிநிலைப் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காகக் காணி சுவீகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்றுக் காலை அங்கு பொதுமக்களும் அரசியல்வாதிகளும் திரண்டனர். ஆனாலும் நில அளவையாளர்கள் அளவீட்டு நடவடிக்கைக்காக அங்கு வரவில்லை.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகக் கடற்படையினரின் தேவைக்காகக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

## படை முகாம் அமைக்க காணிகளை வழங்காதீர்

### எமது இனத்தின் எதிர்கால இருப்பை சிதைக்க வேண்டாம் என்கிறார் கஜதீபன்

யாழ்ப்பாணம், நவ. 21

படையினர் முகாம் அமைப்பதற்கு காணிகளை அரசுக்கு விற்க வேண்டாம். எமது இனத்தின் எதிர்கால இருப்பைச் சிதைக்கும் வேலைகளை ஊக்குவிக்க வேண்டாம் என்று வடக்கு மாகாணசபை ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாதகலில் காணி உரிமையாளர் ஒருவர் தனது காணியைக் கடற்படையினருக்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருக்குறள் மனனப்போட்டிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், நவ.21

திருக்குறள் மனனப்போட்டி 2015 இற்கான அறநெறிப் பாடசாலை மாணவர்களின் * விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை இணுவில் திருக்குறள் மன்றம் கேட்டுள்ளது.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்தியைக் கருத்தில் கொண்டு மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டியை நடத்த மன்றம் தீர்மானித்துள்ளது.

மனனப் போட்டிக்காக அறத்துப்பால் பொருட்பாலில் உள்ள 15 அதிகாரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வலிகாமத்தில் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலக அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். விண்ணப்பங்களை செயலாளர், இணுவில், திருக்குறள் மன்றம், அறிவாலயம், கோயில் வாசல், இணுவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-7)

**வேலையாள் தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு அனுபவமுள்ள, பழகவுள்ள பெண் மருந்தக உதவியாளர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். (64424) (46.6.3)

077 664 7464, 021 222 8851

# மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 21

கொழும்பு, தந்தை செல்வா நற்பணி மன்றத்தினரின் அனுசரணையுடன், சமூக அபிவிருத்தி மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றத்தலைவி ஆ.ருக்மணி தலைமையில் இல.276, அரசடி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள மன்ற பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக நற்பணி மன்றத் தலைவர் ரி.மனோகரனும் பொதுச் செயலாளர் க. தளையரட்ணமும் கலந்து கொள்வர். (வ-ரி)

**வேலை வாய்ப்புக்கள்**

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் அதியுயர் சம்பளத்துடன் கீழ் காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Work | Qty | Salary (QR) |
|---|---|---|
| Senior Technical Officer (Civil) | 03 | 5000+OT |
| Senior Technical Officer (Mechanic) | 03 | 5000+OT |
| Senior Technical (Electrical) | 10 | 5000+OT |
| Store Keeper | 05 | 3600+OT |
| Land Survivor | 05 | 3500+OT |
| Civil Forman | 03 | 3000+OT |
| Cleaning Supervisor | 05 | 2600+OT |
| Heavy Vehicle Driver (GCC Valid License) | 10 | 2407+OT |
| HV AC Mechanic | 10 | 1750+OT |
| Mechanical (Pump & Motor) | 10 | 1700+OT |
| Technichian | 10 | 1600+OT |
| Plumber (ITI Maintenance) | 10 | 1500+OT |
| Light Vehicle Drivers (GCC Valid License) | 05 | 1500+OT |
| Light Vehicle Drivers (First Time) | 05 | 1200+OT |
| Carpenter | 05 | 1500+OT |
| Meson | 10 | 1400+OT |
| Cleaning | 20 | 900+OT |

* உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
* கைவசம் வீசா உள்ளதால் 2 வாரத்தில் பயணம்.
* உங்கள் விண்ணப்பங்களை E-mail மூலமாக அனுப்பிவையுங்கள்.

E-mail Add: lankavoicenafees@gmail.com

எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நேர்முகப் பரீட்சை இடம்பெறும். நேரடியாகவும் உங்கள் விண்ணப்பங்களை கையளிக்க Lankavoice, இல.26/2, Station Road, Vavuniya.

* வங்கிக்கடன் வசதி செய்துதரப்படும்.

Capital Recruitment International (Pvt) Ltd.
No.130 3/1, Grandpass, Colombo 14. LL No: 2248
(சி17762) (12.3.6)
Tel No: 077 792 9475

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**
**க.பொ.த.உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடநெறியை ஆரம்பித்தல் - 2014**

தென்மராட்சி கல்வி வலய ஆலோசனைக்கமைவாக எமது கல்லூரியில் க.பொ.த.உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடநெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

**தகைமை:**

கடந்த 2013 டிசெம்பர் மாதம் க.பொ.த.(சா/தர)ப் பரீட்சைக்குத் தோற்றி கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 24.11.2014ஆம் திகதிக்கு முன்பு கல்லூரியின் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்கவும்.

யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
கொடிகாமம். (சி17656) (12.3.6) - அதிபர்

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**
**2015 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி**

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2015ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 01.12.2014ஆம் திகதி **திங்கட்கிழமை முற்பகல் 10.00** மணி வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு **அன்று முற்பகல் 11.00** மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் **அன்று முற்பகல் 10.00** மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.) இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் **28.11.2014** ஆம் திகதி **வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00** மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் **2/3 பகுதியை** 10.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ **இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.**

**2015 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை 01 | 1,402,000.00 | 14,020.00 | 1,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை 02 | 1,402,000.00 | 14,020.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை 01 | 601,000.00 | 6,010.00 | 1,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை 02 | 601,000.00 | 6,010.00 | 1,000.00 |
| 05 | கோழி இறைச்சிக் கடை 01 | 851,000.00 | 8,510.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை 02 | 851,000.00 | 8,510.00 | 1,000.00 |

குறிப்பு: இந்நகராட்சிமன்றத்தின் கோழி இறைச்சிக்கடைகளிலிருந்து **1Km** சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
20.11.2014

**இ.தேவசகாயம்பிள்ளை,**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம்**
**சாவகச்சேரி.** (சி/17667) (4.6.3)

**மணிவிழா வாழ்த்து**

**திருமதி வசந்தகுமாரி சிவபாலசிங்கம்**

வைகறையில் அவதரித்து
வானவில்லாய் ஒளிபரப்பி
சிந்தையில் அன்பிருத்தி
எந்தையைக் கரம்பிடித்து

உறவுகளை சிரமேற்று
இல்லற வாழ்வில்
தழைத்தோங்கி
நற்பிள்ளைகளை
ஈன்றெடுத்து
மாந்தர்களாய் மிளிரவைத்து
ஆறு தசாப்தங்களை

அன்புடனே தொட்டுவிட்ட
உங்களுக்கு
மலருகின்ற வருடங்களும்
மகிழ்வான தருணங்களாய்
மாறிட
மகிழ்வுடனே
வாழ்த்துகின்றோம்
மாண்பேரடு வாழிய
பல்லாண்டு!!!



நாளை (22.11.2014) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
T.P:077 022 0782

வாழ்த்துவோர்:
சி.சிவபாலசிங்கம் (கணவர்)
(ஓய்வுநிலைக் கிராம அலுவலர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.
(52014)(4.3.6)

## நிறுவுநர் நினைவு தினமும் மரநடுகை நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ. 21
சமூக அபிவிருத்தி மன்ற நிறுவுநர் சண்முகம் ஞானப் பிரகாசத்தின் நினைவு தினமும், மரம் நடுகையும் கந்தர் மடத்திலுள்ள மன்ற அலுவலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்றத் தலைவர் ஆ.ருக்மணி தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரன், கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி த.ஜெயராஜ் ஆகியோரும் விசேட விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ.கனக சபாபதி நிகழ்த்துவார். (வ-ரி)

## பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், நவ.21
நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையின் பொதுக்கூட்டமும் ஒன்று கூடல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கலாசாரப் பேரவையின் நல்லூர் கலைஞர்களுக்கிடையிலான ஒன்றுகூடலில் பாடல், ஆடல், நடிப்பு , கவித்துவம் போன்ற 4 நிமிடங்களுக்கு மேற்படாத கலை நிகழ்வுகளை கலைஞர்கள் வழங்கி சபையை மகிழ்விப்பதுடன் கலைக் குழுக்களின் விடய ஆய்வும், கலாசார பேரவையின் புதிய நிருவாக சபைத் தெரிவும் இடம்பெறும். (வ-7)

## யாழ்.பேராலய சூழலில் சுகாதார சீர்கேடு

யாழ்.பேராலயத்தை சுற்றியுள்ள வீதிப் பகுதிகள் குப்பைகள், புல்பூண்டுகள் நிறைந்து சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் நிலையில் காணப் படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக மத்தியூஸ் வீதியிலுள்ள குளத்தின் சூழலில் குப்பைகள் அதிகம் காணப்ப டுவதுடன் குளத்திலும் குப்பைகள், அசுத்தங்கள் தேங்கிக் காணப் படுகின்றன.

மேலும் அந்தப் பகுதியிலுள்ள இரு பொதுக் கிணறுகள் பாவனையின்றி இருப்பதால் அவற்றில் மாமிசக் கழிவுகளை மக்கள் வீசுகின்றனர். இதனால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. அருகிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாநகரசபை அந்தப் பகுதியின் சுகாதார விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## கச்சாய் நூலகத்தில் நடைபெற்ற வாசிப்புமாத இறுதிநாள் நிகழ்வு

கொடிகாமம், நவ.21
சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய இறுதி நாள் நிகழ்வும் பரிசில் வழங்கும் நிகழ்வும் கடந்த 13 ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் சி.துரைராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பித்தார்.

ஆரம்பத்தில் முதன்மை விருந்தினர் உட்பட்ட குழுவினர் பாடசாலை வாசலில் இருந்து மங்கல வாத்தியம் முழங்க ஊர்வலமாக நிகழ்வு மேடைக்கு அழைத்து வரப் பட்டனர்.

மங்கல விளக்கு ஏற்றுதல், வரவேற்புரை, விருந்தினர் உரை, பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் க.அசோகலிங்கம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ-122)


## 'புயல் மழைக்கு பின்னான பொழுது' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.21
த.ஜெயசீலனின் 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' என்ற கவிதை நூலின் அறிமுக விழா பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ராஜா ராணி சேவை இல்ல மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்குக் கலாபூசணம் குப்பிழான் ஐ.சண்முகன் தலைமையில் இடம்பெறும்.

நூல் அறிமுக உரையை சாகித்யரத்னா தெணியானும் நூல் வெளியீட்டுரையை கவிஞர் இ.சு.முரளிதரனும் நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியைப் பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் சி.பத்மநாதனும் கௌரவ பிரதியை கலாபூசணம் ச.உருத்திரேஸ்வரனும் பெற்றுக் கொள்வார்கள். (வ-ரி)

திருமண வரவேற்பு உபசாரம்
மணமகன் நிஷாந்
மணமகள் றூபினி
கடந்த 10.11.2014 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட எமது பிள்ளைகளது திருமண வரவேற்பு உபசார நிகழ்வில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதிப்பதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இடம் : இராஜேஸ்வரி திருமண மண்டபம், பலாலி வீதி, கோண்டாவில்.
காலம் : நாளை(22.11.2014) சனிக்கிழமை மு.ப. -10.30 மணி
பெற்றோர்
திரு.திருமதி செ.நாகரட்ணம், உரும்பிராய்.
திருமதி த.இரத்தினசிங்கம், பாண்டியன்தாழ்வு.
(54411)(5.3)





## சாயிபாபா அவதார தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.21
பருத்தித்துறை, பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் சாயிபாபாவின் 89ஆவது அவதார தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி நிலையத்தின் நிலையத் தலைவர் ஸ்ரீ.ஆர். இராசநாதன் தலைமையில் நடைபெறும். (வ-ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மாணவர் கௌரவிப்பு

கரணவாய், நவ.21
நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையில் இருந்து 5ஆம் தரப் பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.தேவராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். (வ-108)

பெயர்மாற்றம்
திருநெல்வேலியைச் சேர்ந்த சிவக்கொழுந்து சிவராசா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சிவக்கொழுந்து செல்வராசா என பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(54421)(45.3) சிவக்கொழுந்து செல்வராசா

IELTS A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.
K.U Education,No 626 1/1,K.K.S Rd,Jaffna

வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விற்பனை வாகனத்தில் வேலை செய்வதற்கு திறமையும், நேர்மையும் உள்ள காசாளர், பொருள்கள் வழங்குபவர் தேவை.
* தங்குமிடவசதி இலவசம்
* சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
விளம்பர இல-5030
மே/பா உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(54383) (4.6.3)

# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம்(PSDG) - 2014

## நானாட்டான் பிரதேச சபை

**01. வீதி விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துதல் (Solar Power System)**

**ஒப்பந்த இல NP/14/42(6)/ PSDG /W/02**

01. வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டத்திற்குமான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார், வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார். (தொலைபேசி: 023-3236345/ 023-2050652) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை 11.12.2014 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார், எனும் இடத்திலிருந்து 21.11.2014 ஆம் திகதியிலிருந்து 11.12.2014 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1500/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார். எனும் முகவரிக்கு 11.12.2014ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு நாள்கள் - 26.02.2015) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம | வேண்டப்படும், தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01. NP/14/ 42(6)/ PSDG /W/02 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துதல் (Solar Power System) | 0.445 | 03 மாதங்கள் | ... | ரூ 22,500.00 | 16 ஜனவரி 2015 |

01. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 01.12.2014 ஆம் திகதி (திங்கட்கிழமை) மாலை 14.30 மணிக்கு நானாட்டான் பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

அ.தி.அன்புராஜ் லெம்பேட்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்,
வடக்கு மாகாணம்,

21.11.2014 (C17763)(12.3)

# போரில் உறவுகளை இழந்த வடக்கு மக்கள் விளக்கேற்றி அஞ்சலிப்பதற்கு இடமில்லை

## ஆனால் ஜனாதிபதியின் பிறந்த நாளுக்கு பூசை வழிபாடுகள் சபையில் காட்டமாக எடுத்துரைத்தார் அரியநேத்திரன் எம்.பி

கொழும்பு, நவ. 21

போரில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேரை இழந்த வடக்கு மக்கள் அவர்களது உறவுகளுக்காக விளக்கேற்ற இடமளிக்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதியின் பிறந்த நாளுக்காக வடக்கிலுள்ள ஆலயங்களில் பூசை நடத்தவேண்டும் என்று பிரதேச செயலக பிரிவுகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள்தான் கொலை செய்யப்படுகிறார்கள் என்றால் தமிழும் கொலை செய்யப்படுகின்றது. 'சிறப்பு கருத்திட்ட அமைச்சு' என எழுதப்பட வேண்டியதற்குப் பதிலாகச் 'சிறப்பு கருத்திட்ட அமைச்ச' என்று எழுதப்பட்டுள்ளது. தமிழ் கொலை செய்யப்பட்டுள்ளது. இங்குதான் கஞ்சிக்கும் அமைச்சர், காட்டிக்கொடுக்கவும் அமைச்சர் இருக்கின்றனர்.

இங்கு மீள்குடியேற்றம் பற்றிப் பேசப்பட்டது. ஆனால் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மீளக்குடியேற்ற அமைச்சால் ஒரு வீடு கூடக் கட்டிக்கொடுக்கப்படவில்லை. சம்பூர் மக்கள் இன்று அவல வாழ்க்கை வாழ்கின்றனர். குதிரைக் கொட்டில், நாய்க்கூடு, கோழிக்கூடு போன்ற இடங்களில்தான் அந்த மக்கள் வாழ்கின்றனர்.

மீள்குடியேற்ற அமைச்சின் அறிக்கையின்படி வடக்கு-கிழக்கில் 7 ஆயிரத்து 840 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைவிட அதிகமான குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகளை வழங்கியுள்ளது. ஒரு கதவு, ஒரு ஜன்னல், ஒரு அறை மட்டும் முழுமைப்படுத்தப்பட்டதே இந்திய அரசின் வீட்டுத்திட்டமாகும். இந்திய அரசின் வீட்டுத்திட்டம் முழுமைப்படுத்தப்படவில்லை. எனவே, அதனை முழுமைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (கு-சி)


## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லையா பொன்னுத்துரை



ஆண்டுகள் எத்தனை ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டு அழியா

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

தோற்றம் 15.11.1919 மறைவு 22.11.1995

கச்சேரி நல்லூர் ரோட்,
10, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.

(54426)(4.3.6)



## மரண அறிவித்தல்

### செல்வி மேரி பிலோமினா றோஸ் கிறிஸ்தோப்பர்

(முன்னாள் கணக்காளர் - யாழ்.செளக்கிய சேவை சி.சே.சங்கம் - யாழ்.போதனா வைத்தியசாலை)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மேரி பிலோமினா றோஸ் கிறிஸ்தோப்பர் 19.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அ.கிறிஸ்தோப்பர் (கணக்கர்) - மேரி மக்டலீன் தம்பதியரின் அன்பு மகளும், கிறேஸ், அல்பேட் (அருமை), ஜோய்ஸ், வுளோறன்ஸ், ஆனந்தராஜா, ஞனேஸ் (ஆசிரியர், யா/புனித ஜோன் பொஸ்கோ), தர்மேஸ், ராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுவீடன்கலிஸ்ரஸ் மற்றும் ஞானேஸ்வரி, தங்கராசா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சறோ, லதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தமயந்தி, லக்ஸ்மன், மடோனாஹஷந்தி (மருத்துவபீட இறுதிவருடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் சிறியதாயும், அருந்ததி, சானிக்கா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2014 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் இறுதி திருப்பலி ஆராதனையின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(54429)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி ஆனந்தவல்லி யோகரட்ணராஜா



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தவல்லி யோகரட்ணராஜா லண்டனில் 19.11.2014 புதன் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரதராஜா சிவயோகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மங்கையர்க்கரசி தம்பதியரின் அருமை மீருமகளும், யோகரட்ணராஜாவின் அன்பு மனைவியும், சுதர்மன், நிதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயும், அமுதவல்லி, அற்புதவல்லி, அம்புஜவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிந்தூரி, கஸ்தூரி, அபிராமி, குருபரன், சயந்தவி, கோபிரியன், தீபன், குமணா ஆகியோரின் மாமியும், யோகலீலா, தேவசுந்தரம், பத்மலீலா, ஜெகீஸ்வரன், இந்திரலீலா, ராஜலிங்கம், சந்திரலீலா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/23, சண்முகபிரியா,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(53989)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்


# தகவல் தொழில்நுட்ப வினாத்தாள் தயாரிப்பு

## உயர்தர வகுப்பு மாணவருக்கு

யாழ்ப்பாணம், நவ. 21

ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு அடுத்த வருடம் நடைபெறவுள்ள தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கான பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய ஆசிரியர்களின் அபிப்பிராயங்களும் கேட்கப்பட்டுள்ளன.

பரீட்சைகள் திணைக்களத்தினால் கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் அது தொடர்பான அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. அதில் சுமார் 200 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

புதிய பாடப் பிரிவாக தகவல் தொழில்நுட்பம் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான முதல் பரீட்சை அடுத்த வருடம் இடம்பெறவுள்ளது. இதனையடுத்து அது தொடர்பிலான வினாத்தாள் தயாரிக்கப்பட்டது.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட வினாத்தாள் தொடர்பான குறை நிறைகள், அதன் தராதரம், அது மாணவர்களுக்கு ஏற்றதா அல்லது கடுமையானதா உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. ஆசிரியர்களது ஆலோசனைகளுடன் அந்த வினாத்தாள் திருத்தம் செய்யப்படும் என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர். (கு-4)


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் கந்தையா குணபாலசிங்கம்

(முன்னாள் சாரதி - தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு)



மலர்வு 13.03.1940 உதிர்வு 05.12.2009

திதி: 21.11.2014

அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம் உயர்வுக்காய் அல்லும் பகலும் உழைத்து
இப்பூமி தனில் எம்மை வாழவைத்து
தந்தையே! நீர்மட்டும் தனியே சென்றதேனோ?
ஆறவில்லை அப்பா! ஆண்டுகள் ஐந்து ஆனபோதும்
தாழவில்லை உங்களை இழந்த துயரம்!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்!
என்றென்றும் நாம் வாழும்வரை!

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முல்லையடி, பளை.

(47833)(45.6.3)



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (22.10.2014) புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி

### அன்னலட்சுமி பரம்சோதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 19.11.2014 புதன் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(சி/17751)(4.3.6)

குடும்பத்தினர்.
அம்பிகைபாதன்
(ராசன்)
(சோதி ஸ்ரோர்ஸ்)



## இசைமேதை அமரர் சிவஸ்ரீ A.M. வர்ணகுலசிங்கம் அவர்களின் 31ஆம் நினைவு நாள்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் வாழ்நாள் அனுபவ நூல் வெளியீடும்



23.10.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வர்ணகுலசிங்கம் அவர்களின் பிரார்த்தனை நிகழ்விலும், மதிபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அவர்தம் மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : வறுத்தலை பிள்ளையார் ஆலய மண்டபம் அளவெட்டி வடக்கு. (கூத்தஞ்சிமா சந்தை அருகில்)
காலம் : 22.11.2014 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி

திருமதி வர்ணகுலசிங்கம்
மற்றும் குடும்பத்தினர்.
வர்ணராமேஸ்வரன் (மகன்) 075 4626315
கைலாயநாதன் (மருமகன்) 077 172 3613

## வீதி திருத்த பிரேரணைக்கு எதிர்ப்பு

தென்மராட்சி, நவ.21

வீதி புனரமைப்பு தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை உறுப்பினர்களிடையே பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தலைவரின் வாக்குறுதியை அடுத்து உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட பின்னர் வீதி திருத்தத்தை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

உறுப்பினர் க.மயில்வாகனம், நுணாவில் மேற்கில் உள்ள காண்டைக்காடு வீதி திருத்தத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது எனவும், அதனை அதிகரித்து தருமாறும் கோரினார். அதற்கு எதிரணி உறுப்பினர் ந.திருக்குமரன் ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தார். அவ்வேளையில் உறுப்பினர் க.சிறிதரன், இந்த வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தினர் வீதியில் வாகனங்களை நிறுத்தி திருத்த வேலை மேற்கொள்வதால் பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. இதனால் இந்த வீதியில் வாகனங்களை நிறுத்தித் திருத்துவதை தடுத்த பின்னரே வீதி புனரமைக்கவேண்டுமெனக் கூறினார்.

இந்த நேரத்தில் வாதத்தில் ஈடுபட்ட உறுப்பினர்களை அமரச் செய்து விட்டு 15 தினங்களுக்குள் வீதியில் வாகனங்கள் நிறுத்தித் திருத்துவதை தடைசெய்வதாக உறுதியளித்தை அடுத்து பிரேரணையை ஏற்றுக் கொள்வதாகத் தீர்மானிக் கப்பட்டதாக தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (த-9)

# கர்ப்பிணிகள், சிறுவர்களின் போஷாக்குக்கு நிதி ஒதுக்குக

### சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பிரேரணை

தென்மராட்சி, நவ.21

சாவக்சசேரி நகர சபை எல்லைக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறார்களுக்கு போஷாக்கு உணவுப் பொருள்கள் வழங்க 2015 உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கப்படல்வேண்டும்.

-இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் சு.பாலமயூரன் தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் போஷாக்கின்மையால் கர்ப்பிணிகளும், சிறார்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் குழந்தைகள் கிளினிக்கில் அதிபோஷாக்கு குறைந்த சிறார்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் போஷாக்கின்மையால் பெருமளவு கர்ப்பிணித் தாய்மாரும் இனங்காணப்படுவதால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறார்களின் நலன்கருதி மாதத்தில் இரு தடவைகள் போஷாக்கு உணவு வழங்கச் சபையின் உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படல் வேண்டுமென பாலமயூரன் கோரினார்.

போஷாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறார்களுக்கும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் இனங்காணப்படும் அதிபோஷாக்கு குறைந்த பிள்ளைகளுக்கும் போஷாக்கு உணவுவழங்கும் திட்டம் நீண்டகாலமாகச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், உறுப்பினரின் கோரிக்கை வரவேற்கத்தக்கது எனவும் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (த-9)

## தொழிலாளருக்கு மழைக் கவசம் வழங்க முடிவு

தென்மராட்சி, நவ.21

சாவகச்சேரி நகர சபையின் வெளிக்கள வேலையில் ஈடுபடும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மழை அங்கி கொள்வனவு செய்து வழங்க நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை இந்தப் பிரேரணைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில், சபையின் அனைத்துத் தர வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது போல வெளிக்களத் தொழிலாளர்களுக்கும் மழை அங்கி வழங்க வேண்டியது அவசியமாகும். தொழிலாளர்கள் கடமை நேரத்தில் பயன்படுத்துவதற்கு வருடாந்தம் கையுறை, காலங்கி மற்றும் சீருடை வழங்கப்படுகின்றன. ஆனால் மழை அங்கி வழங்கப்படாததால் வெளிக்கள வேலையில் ஈடுபடும் வேளையில் மழை பெய்யும்போது நனைந்த படிவேலை செய்கிறார்கள். சபை மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டு அனைத்து வெளிக்களத் தொழிலாளர்களுக்கும் மழை அங்கி வழங்க வேண்டும் என உரையாற்றினார். இந்தப் பிரேரணையைச் சபை ஏற்றுக் கொண்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.(த-9)

# யாழ். கரையோரப் பகுதிகளில் வெள்ளம் அகற்ற நடவடிக்கை



யாழ்ப்பாணம், நவ.21

வசந்தபுரம் அண்ணா சனசமூக நிலையத்தினர் நேற்று முன்தினம் அராலி-காக்கைதீவு வீதியூடாகத் தற்காலிக வடிகால் அமைத்து கரையோரப் பகுதிகளில் தேங்கிய வெள்ளத்தை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர் ஒன்று சேர்ந்து வெள்ளம் வழிந்தோட வசதியாக வாய்க்கால் ஒன்றை அமைத்தனர்.

யாழ்.மாநகராட்சி மன்றம் மற்றும் அரச நிறுவனங்கள் எவையும் தேங்கிய வெள்ளத்தை அகற்றுவதற்கு முன்வராமையால் இளைஞர்கள் தாமாக முன்வந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள வடிகால்களைக் கூட துப்புரவு செய்வதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளாமையால்தான் தமது பகுதியில் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக சிரமதானப் பணியில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் வெள்ளம் வழிந்தோட வசதியாக வடிகால் ஒன்றை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரி இருந்தனர். எனினும் அது அமைக்கப்படவில்லை. (த-17)

## டிப்பர் வாகனங்களால் யாழில் உயிரிழப்புக்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

டிப்பர் வாகனங்களினால் பல உயிரிழப்புக்கள்இடம் பெற்றுள்ளன. அதன் சாரதிகள் இரவு பகல் என்று பாராமல் ஓய்வில்லாமல் பணத்துக்காக வாகனம் ஓடுகிறார்களா? என்று மருத்துவர்கள் கேள்வியெழுப்பியுள்ளதோடு அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

வீதி விபத்துக்களால் ஏற்படும் இறப்புக்களையும் பாதிப்புக்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ்.மருத்துவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வூட்டும் செய்தியாளர் சந்திப்பு யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மருத்துவர்களான கோபிசங்கர், ரவிராஜ், தயாளன் அம்பலவாணர், சுரேந்திரகுமாரன், மயூரதன் மற்றும் யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மற்றும் ஏ - 9 வீதியில் இடம்பெறும் விபத்துக்களில் டிப்பர் வாகன விபத்துக்களும் பெரிய பங்களிப்பு வகிக்கின்றன. டிப்பர் விபத்தால் பலர் காயமடைந்து உயிரிழந்துள்ளனர். அவர்களில் குடும்பஸ்தர்களும் உள்ளடங்குகின்றனர்.

டிப்பர் சாரதிகள் ஓய்வில்லாமல் இரவு பகலாகப் பணத்துக்காக வாகனம் ஓடுகிறார்களா என்று தெரியவில்லை. அவ்வாறாயின் களைப்பு, சலிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் விபத்து ஏற்பட வழி வகுக்கிறது. அவர்களுக்கு ஓய்வு அவசியம். அதனை டிப்பர் வாகனங்களின் நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்கள் கவனத்தில் கொள்கிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் அது பற்றி அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். பொலிஸாரால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் வரவேற்கத்தக்கது என்று கூறினார். (த-4)

# கால்நடை வைத்திய நிலையம் மூடும் முயற்சி கைவிடப்பட்டது

வலி.தென்மேற்கு, நவ.21

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் உப அலுவலக வளாகத்தில் ஒதுக்குப் புறமாக இயங்கிவரும் உப கால்நடை வைத்திய நிலையத்தை மூடுவதற்கு எடுத்த முயற்சி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது. மக்களின் நலன் கருதி மேற்படி நிலையம் அதே இடத்தில் தொடர்ந்து இயங்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களில் வசிக்கும் கால்நடை வளர்ப்போரினதும் கோழிப் பண்ணையாளர்களினதும் கோரிக்கைக்கு அமைய வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் உப அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் ஒதுக்குப் புறமாகவுள்ள சிறிய கட்டடத்தில் உப கால்நடை வைத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இரு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்துக்கான வாடகைப் பணமாக மாதாந்தம் 2,500 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வைத்திய நிலையம் இங்கு அமைந்துள்ளதால் தினசரி அனேகமான மக்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

இந்த நிலையம் மேற்படி வளாகத்தில் இயங்குவதால் பிரதேச சபையின் உடைமைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்றும் அருகிலுள்ள முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறுவர்களின் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுவதாகவும் காரணம் காட்டி இதனை ஜனவரி மாதத்திலிருந்து மூடுவதற்கான நடவடிக்கையை பிரதேச சபை மேற்கொண்டது.

இது குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டபோது இந்த நிலையத்தினால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறிய உறுப்பினர்கள், நிலையத்தை மூடுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் வைத்திய நிலையம் அதே இடத்தில் தொடர்ந்தும் இயங்க வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளனர். (த-115)

## காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு கடற்கரைகளில் ரோந்து அதிகரிப்பு

வலி.வடக்கு, நவ. 21

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அந்தப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் அதிகரிக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிலாந்த ஜெயவர்த்தன குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**யாழ். மாவட்டத்தின் கடற் கரைப் பகுதிகள் ஊடாக இடம்பெறும் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் பொலிஸாரின் ரோந்துப் பணிகளை அதிகரிக்கும்**

யாழ். மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகள் ஊடாக இடம்பெறும் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் பொலிஸாரின் ரோந்துப் பணிகளை அதிகரிக்கும் செயற்பாடுகளை காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை, காங்கேசன்துறை, பலாலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுகளில் இத்தகைய ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## காணாமற்போன மோ.சைக்கிள் கண்டுபிடிப்பு

வலி.வடக்கு, நவ. 21

சுன்னாகம் நகரப் பகுதியில் காணாமற்போனதாக கூறப்பட்ட பல்ஸர் ரக மோட்டார் சைக்கிள் நகரப் பகுதியில் உள்ள மறைவான இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் குறித்த மோட்டார் சைக்கிள் காங்கேசன்துறை வீதியில் உள்ள உணவகம் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டவேளையில் காணாமற் போயிருந்தது.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. (த-86)

# யானைகள் இரவில் அட்டகாசம் அச்சத்தில் மணற்குளம் மக்கள்

மன்னார், நவ.21

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மணற்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் இரவு நேரங்களில் கிராம மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். அடிக்கடி இப்பகுதிக்கு வரும் யானைகள் பயிர்களையும் பயன் தரும் மரங்களையும் அழிப்பதுடன் சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்துகின்றன. நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் சில காட்டு யானைகள் கிராமத்தின் பின் பக்கமாக வந்து மக்களின் வீட்டுத் தோட்டங்களை நாசப்படுத்தியதாகக் கிராம மக்கள் தெரிவித்தனர். இது குறித்து அந்த மக்கள் கூறுகையில்.

நாங்கள் 2003 ஆம் ஆண்டு மீள்குடியேறினோம். ஆயினும் எங்களுக்கு இதுவரை அரசின் உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. எங்கள் கிராமத்தில் உள்ள வீதிகள் திருத்தி தரப்படவில்லை. இது இவ்வாறிருக்க தற்போது காட்டு யானைகளின் தொல்லை



அதிகரித்துள்ளது. தற்போது விவசாய காலம் என்பதால் காட்டு யானைகள் அடிக்கடி தோட்டங்களுக்குள் நுழைந்து அழிவை ஏற்படுத்துகின்றன. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றனர்.

இதேவேளை, யானை தாக்கி வவுனியா இளம்மருதன் குளத்தில் உள்ள இரண்டு வீடுகள் முற்றாகச் சேதம் அடைந்துள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் அதிகாலை மேற்படி கிராமத்துக்குள் புகுந்த யானைகள் அங்கிருந்த 2 வீடுகளைத் தாக்கிச் சேதம் செய்துள்ளன. இதில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. மேற்படி விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும், கடந்த வாரம் இதே போன்று யானைகள் தாக்கி இரண்டு வீடுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது. (த-56-421)



## வலி.மேற்கில் கட்டடங்கள் புனரமைப்பு



சங்கானை, நவ.21

வலி.மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள சங்கானைப் பொது வாசிகசாலையின் புதிய கட்டடத்தின் கீழ்த் தளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சங்கானைப் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்படும் பொது மண்டபத்தின் கீழ்த் தளமும் புனரமைப்பு முடிந்த நிலையில் மேல்தளக் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சங்கானை மீன் சந்தை புதிய இடத்தில் கட்டுவதற்கான ஆயத்த வேலைகள், சுற்றுமதில் அமைத்தல் செயற்பாடுகள் பிரதேச சபையினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-29)

## மாந்தை உப்பு கூட்டுத்தாபன புதிய தலைவர் ஏ.ஆர்.அமின்

மன்னார், நவ. 21

மன்னார் மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அமைச்சர் றிசாத் பதியுதீனால் அண்மையில் நியமனம் செய்யப்பட்ட ஏ.ஆர்.அமின் நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவருக்கு மாந்தை உப்புக் கூட்டுத் தாபனத்தில் வரவேற்று நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர், கைத்தொழில் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் எம்.முஜாஹிர், மன்னார் மாந்தை உப்புக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் எம்.ஏ.துவான் மன்சில் உட்பட உப்புக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் புதிய தலைவரை வரவேற்றனர். (த-56)

## வரி மதிப்பு அறிவித்தல் விநியோகம்

தென்மராட்சி, நவ.21

சாவகச்சேரி நகரசபையால் சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்காக 2015 ஆம் ஆண்டுக்குரிய வரிமதிப்பு அறிவித்தல் அடுத்த வார்ம் தொடக்கம் வீடுவீடாக விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆதன வரியினைச் செலுத்துவோருக்கு வரிக்கழிவு வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

## நீர் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நீர் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடல் நாளை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். குறித்த கலந்துரையாடலின் வளவாளராக வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் செயலாளரும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளரும் பொறியியல் கலாநிதியுமான கே.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும். (த-ரி)



செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிப் பகுதிக்கு பயணம் செய்துள்ளனர். 2004ஆம் ஆண்டு சுனாமி இடர் இடம்பெற்றபோது செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரால் இலங்கைக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. தற்போது இடர் இடம்பெற்று 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் கிளிநொச்சியில் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் நிதியுதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களைப் பார்வையிடும் நோக்குடனேயே அவர்கள் பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (த-10)

## பரந்தன் பிரதம தபாலகம் இம்மாத இறுதிக்குள் திறப்பு

கிளிநொச்சி, நவ.21

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் நீண்ட காலமாகத் திறக்கப்படாதிருந்த பரந்தன் பிரதான தபாலகம் இம்மாத இறுதிக்குள் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

பரந்தன் பிரதம தபால் அலுவலகம் புதிதாகக் கட்டப்பட்டு வேலைகள் அனைத்தும் முடிவடைந்த நிலையிலும் கடந்த இரண்டு வருடங்களாகத் திறந்து வைக்கப்படாது மூடிய நிலையில் காணப்படுகின்றது. தற்போது பரந்தன் தபாலகம் தனியாருக்குச் சொந்தமான வீடு ஒன்றிலேயே நீண்ட காலமாக இயங்கி வருகின்றது.

மேற்படி தபாலகம் இயங்கும் வீட்டில் பரந்தன் பிரதம தபாலகத்தின் முழுமையான செயற்பாடுகளைச் செய்ய முடியாத நிலை காண்ப்படுவதாகவும், இதனால் தபாலகத்துக்கெனக் கட்டப்பட்ட புதிய கட்டடத்தைத் திறந்து அதில் தபாலகத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம தபாலகத்தின் புதிய கட்டட வேலைகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் இந்தக் கட்டடம் நீண்ட காலமாகத் திறக்கப்படாதுள்ளமை குறித்துப் பலராலும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பரந்தன் தபாலகத்துக்கு அண்மையில் பயணம் செய்த வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் இரட்ணசிங்கம், தபாலகத்தின் நிலைமைகளை ஆராய்ந்து புதிய கட்டடத்தையும் பார்வையிட்டதுடன் அதனை உடனடியாகத் திறப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார். இதனை யடுத்து தபாலகம் இம்மாத இறுதிக்குள் திறக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-426)

## எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக 55 பேருக்கே மீன்பிடி உபகரணங்கள்

யாழ்ப்பாணம்.நவ.21

மீன்பிடி அமைச்சினால் எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக வழங்கப்படும் வலை மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்தபோதும் இது வரை 55 பேருக்கே உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தில் பதிவு செய்த படகுகளைக் கொண்ட மீனவர்களுக்குக் கடந்த காலங்களில் எண்ணெய் மானியம் வழங்கப்பட்டு வந்தது. எனினும் எண்ணெய் மானியம் இடைநிறுத்தப்பட்டதால் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அனைத்து மாவட்ட மீனவர்களுக்கும் எண்ணெய் மானியத்துக்குப் பதிலாக வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங் களை மானிய விலையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் மாவட்ட ரீதியாக வலை மற்றும் மீன்பிடி உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அதிக கடற்றொழிலாளர்கள் இருப்பதன் காரணமாகப் பதிவு செய்யப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் உபகரணங்கள் வழங்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வலை மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும் கட்டம் கட்டமாக இந்த வலைத்தொகுதிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் 55 மீனவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. மீனவர்கள் தங்களுக்கும், தங்களது படகுகளுக்கும் காப்புறுதி மேற்கொள்வதில் ஏற்படும் . பின்னடிப்பினாலேயே குறித்த வலைத் தொகுதிகளை உரிய காலத்தில் மீனவர்களுக்கு வழங்க முடியாது இருப்பதாகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-14)

# மஹிந்தவை தோற்கடிக்க 20 அமைச்சர்கள் ஆதரவு

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, நவ.21

ஆளும் கட்சியின் 20 அமைச்சர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க ஆதரவளித்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஜனாதிபதி தேர்தலில் தனித்து போட்டியிடக் கூடிய வல்லமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு காணப்படுகின்றது. எனினும், கூட்டணியாக இணைந்து போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பை மேலும் அதிகரிக்கும்.

அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்து வரும் 20க்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதியை தோற்கடிக்கப்பதற்கு முயற்சிக்கின்றனர்."- என்று தெரிவித்துள்ளார். சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை- களுத்துறை மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ள முயற்சித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் தினங்களில் இரண்டு தரப்பிலிருந்தும் கட்சித் தாவல்கள் இடம்பெறக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.(ற)

# ஜனாதிபதியாக பாப்பாண்டவரை வரவேற்பார் மஹிந்த ராஜபக்ஷ

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண நம்பிக்கை

கொழும்பு, நவ.21

புதிய தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸை வரவேற்பார் என பிரதமர் டி.எம். ஜயரட்ண நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தீர்மானம் ஜனாதிபதியின் அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யாது. பாப்பாண்டவரின் இலங்கைப் பயணத்தின்போது நாட்டில் புதிய ஜனாதிபதியொருவர் பதவி ஏற்றுக் கொண்டிருப்பார்.

அந்தப் புதிய ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷவே. பாப்பாண்டவர் இலங்கைக்கு வரும் போது நாட்டின் அரசியல் சூழ்நிலை முற்று முழுதாக மாற்றமடைந்திருக்கும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நீதிமன்ற ஆலோசனையை சபையில் சமர்ப்பியுங்கள்

## ஜோன் அமரதுங்க கோரிக்கை

கொழும்பு, நவ.21

மூன்றாவது தவணை பதவிக் காலத்துக்கான தேர்தலில் போட்டியிட முடியும் என உயர்நீதிமன்றத்தால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட வியாக்கியானத்தை சபையில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க அக்ராசனத்திடம் நேற்று மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதற்குப் பதிலளித்தபோது, சபாநாயகரும் குறுக்கிட்டு கருத்து தெரிவித்தார். இதேவேளை- பொது வேட்பாளர் தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் நேற்று பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

போக்குவரத்து அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொது வேட்பாளர் குறித்து பேசப்பட்டது. பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்கவும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துக்களைக் கூறினார்.

விவாதத்தில் கலந்துகொண்ட ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துந்நெத்தி, ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை கையகப்படுத்தும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டினார். போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்த விவாதத்தில் உரையாற்றிய போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அத்துரலிய ரத்ன தேரரின் பொறுப்பிலுள்ள விஹாரையை மீளப் பொறுப்பேற்குமாறு கோட்டையில் குண்டர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தியமை நல்லாட்சியாகுமா? என்றும் வினவினார். (ற)

# பாதுகாப்பு கோருகிறார் அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, நவ.21

உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் பொலிஸ் மா அதிபரிடம் பாதுகாப்பு கோரியுள்ளார்.

கொள்கை ரீதியாக எடுத்த அரசியல் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு தானும் தன்னைச் சார்ந்தவர்கள் வசித்து வரும் ராஜகிரிய கோதமி வீதியில் உள்ள விஹாரைக்கு அச்சுறுத் தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு பிக்குமார் கல்வி பயிலும் இந்த விஹாரைக்கு சேதங்கள் ஏற்பட்டால் அது சர்வதேச ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும். அவ்வாறான நிலைமைக்கு செல்லவிடாது தான் உட்பட விஹாரையில் இருக்கும் சகலரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, தாம் தங்கியிருக்கும் விஹாரை மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று வெளியான தகவல்களை அவர் மறுத்துள்ளார். தாக்குதல் ஏதும் நடத்தப்படவில்லை என்றும் அச்சுறுத்தல் மட்டுமே விடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)



கொழும்பு தேசிய அரும்பொருள்காட்சியகத்துக்கு அருகில் வளர்ந்திருந்த பெரும் மரம் ஒன்று விழுந்துள்ளது. அதை அகற்றும் பணிகள் கனரக வாகனங்களின் உதவியுடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# கம்மன்பிலவின் பதவிக்கு மூவரிடையே போட்டி

கொழும்பு, நவ.21

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதி பொதுச் செயலாளர் உதய கம்மன்பில, மேல் மாகாண அமைச்சுப் பதவியிலிருந்து விலகியதை அடுத்து, அந்தப் பதவி வெற்றிடத்துக்கு மூவர் போட்டியிட்டு வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளுங்கட்சியின் ஆதிக்கத்திலுள்ள மேல் மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான ஹெக்டர் பெத்மகே, காமினி திலக்கசிறி மற்றும் சுனில் ஜயமினி ஆகியோரே இந்தப் போட்டியில் களமிறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து பதவிக்கான முறுகல் நிலை ஒன்று அங்கு தோன்றியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பேஸ்புக் பதிவேற்றத்தால் அதிபர் மருத்துவமனையில்

கொழும்பு, நவ.21

பேஸ்புக்கில் தன்னை இழிவுபடுத்திப் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த செய்தியைப் பார்த்த நாவலப்பிட்டியவில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் அதிபருக்கு உயர்குருதியமுக்க நோய் ஏற்பட்டு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதேவேளை, குறித்த பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்துள்ள சிலர், அங்கிருந்த ஆசிரியர் ஒருவரை கடுமையாகப் பேசி, அவர் மீது தாக்குதல் நடத்தியதில், அந்த ஆசிரியையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விரு சம்பவங்களை அடுத்து, குறித்த பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அமைதியற்ற நிலைமை உருவாகியுள்ளது. இவ்விரு சம்பவங்களையும் கண்டித்து, அவர்கள் நாவலப்பிட்டி நகரில் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர். (ற)

# தமிழ் பயின்ற சிங்கள அதிகாரிகள் சேவையை சரிவரச் செய்வதில்லை

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

"தமிழ்ப் பகுதிகளில் சிறந்த அரச சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட தமிழ் மொழி பயிற்றப்பட்ட சிங்கள அரச அதிகாரிகள் தமிழ் மக்களுக்குத் தமது சேவையைச் சரியாக வழங்கவில்லை. அவர்களின் சேவையில் திருப்தி அடையமுடியவில்லை-உணர்வுபூர்வமாக சேவையை அவர்கள் நிறைவேற்றவில்லை. இவற்றை ஆராய்ந்து பார்க்கவும் எம்மால் முடியவில்லை.

- இவ்வாறு கவலை வெளியிடுகின்றார் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசு தேவ நாணயக்கார.

தமது சேவையை முழுமையாக நிறைவேற்ற முடியாது - அல்லது அதை நிறைவேற்றிக்கொள்ளவே முடியாது என்ற அச்சத்தில்தான் மக்கள் இந்த அரச அதிகாரிகளின் சேவை தொடர்பில் முறைப்பாடு செய்யத் தயங்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலப் பகுதியில் 49 ஆயிரம் அரச அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தமிழ், சிங்கள மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலிப் போராளிகளுக்கு சிங்கள மொழிப் பயிற்சி வழங்கப்பட்டது. அத்துடன், வடக்கில் தமிழ் மக்களுக்கு சேவையாற்றும் ஆயிரம் வைத்தியர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல தரப்பினருக்கும் நாம், தமிழ் மொழிப் பயிற்சிகளை வழங்குகின்றோம். ஆனால் இதன் பிரதிபலன் குறித்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாதுள்ளது.

மொழிப்பயிற்சி பெற்ற அரச அதிகாரிகள் சேவை வழங்கும் போது அதை சரியாக நிறைவேற்றுவதில்லை. மொழிக் கற்கையை அவர்கள் தமது சேவையில் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதில்லை. மொழிப் பயிற்சி பெற்ற அரச அதிகாரிகள் மக்களுக்குத் தமது சேவையை சரியாக வழங்குகின்றார்களா என்று ஆராய்ந்து பார்க்க முடியவில்லை.

அத்துடன், சேவை பெறும் மக்களும் இது தொடர்பில் முறைப்பாடு செய்வதில்லை. தமக்குச் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளவே முடியாது என்ற தயக்கத்தில்தான் சேவை பெறும் பயனாளிகள் சேவையிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதில்லை.

எனவே, மொழிப் பயிற்சி பெற்ற அரச அதிகாரிகள் மக்களுக்குத் தமது சேவையை சரியாக வழங்குவது தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஒருவர் மொழியைக் கற்பதனூடாகவோ அல்லது மொழியைக் கற்பிப்பதனூடாகவோ மட்டும் சிறந்த அரச சேவையை வழங்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அரச அதிகாரிகள் தமது சேவையை உணர்வுபூர்வமாக வழங்க வேண்டும்.

குறிப்பாகப் போக்குவரத்துத் துறையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றோம். ஆனால், அது முடியாதுள்ளது. பஸ்களிலுள்ள பெயர்ப்பலகைகளையும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்றார். (ற)

## ரிலாக்ஸா வாசியுங்க



### அழகிய தமிழ் மகன்

ஆண் அழத் தெரியாதவன் அல்லன். கண்ணீரை விழுங்கத் தெரிந்தவன்.
அன்பில்லாதவன் அல்லன். அன்பை மனதில் வைத்து சொல்லில் சொல்லத் தெரியாதவன்.
வேலை தேடுபவன் அல்லன். தன் திறமைக்கான அங்கீகாரத்தைத் தேடுபவன்.
பணம் தேடுபவன் அல்லன். தன் குடும்பத்தின் தேவைக்காக ஓடுபவன்.
சிரிக்கத் தெரியாதவன் அல்லன். நேசிப்பவர்களின் முன் குழந்தையாய் மாறுபவன்.
காதலைத் தேடுபவன் அல்லன். ஒரு பெண்ணிடம் தன் வாழ்க்கையைத் தேடுபவன்.
கரடு முரடானவன் அல்லன். நடிக்கத் தெரியாமல் கோபத்தைக் கொட்டிவிட்டு வருந்துபவன்.

## நிச்சயதார்த்தம் நடக்கவில்லை



'லேசா லேசா' திரைப்படம் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் திரிஷா. இவர் தெலுங்கிலும் முன்னணி நடிகையாக இருக்கிறார். தற்போது அஜீத்துடன் 'என்னை அறிந்தால்' திரைப் படத்தில் நடித்து வருகிறார். திரிஷாவும் தெலுங்கு நடிகர் ராணாவும் காதலிப்பதாக செய்திகள் வந்தன. இருவரும் பட விழாக்களில் ஜோடியாக பங்கேற்றார்கள்.
வெளிநாடுகளுக்கும் ஒன்றாக சென்று வந்தார்கள். ஆனால் திடீரென்று இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்து விட்டனர். ராணாவுக்குக் கன்னட நடிகையுடன் தொடர்பு இருந்ததால் திரிஷா விலகி விட்டதாகக் கூறப்பட்டது.
இந்த நிலையில் திரிஷாவுக்கும் தமிழ் பட தயாரிப்பாளர் வருண் மணியனுக்கும் சென்னையில் நிச்சயதார்த்தம் நடந்ததாகப் பரபரப்பு செய்தி வெளியானது. இருவரும் ஏற்கனவே நட்பாகப் பழகி வந்தனர். விருந்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார்கள். தற்போது இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்ததாக வெளியான செய்தி திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.
"எனக்குத் திருமண நிச்சயதார்த்தம் நடக்கவில்லை. நிச்சயதார்த்தம் நடந்ததாக வெளியான செய்தி வதந்திதான். என் திருமண நிச்சயதார்த்தம் என்பது வாழ்க்கையில் ஒரு முக்கியமான நாளாக இருக்கும். அதை சந்தோஷமாக அறிவிக்கும் முதல் ஆளாக நான் இருப்பேன்" என்று திரிஷா தெரிவித்துள்ளார்.

## முடிவுக்கு வரும் தீபக்கின் ஆட்டம்



'தென்றல்' தொடரில் நடித்துக் கொண்டிருப்பவர் தீபக். தற்போது சின்னத்திரையிலிருந்து சினிமாத் திரைக்குத் தாவியுள்ளார். 'தண்ணியில கண்டம்' என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கின்றார். இந்தப் படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது.
இது தொடர்பில் தீபக் தெரிவிக்கையில், 'தென்றல்தான் நான் நடிக்கும் கடைசி சின்னத்திரைத் தொடர். தற்போது சின்னத்திரையிலிருந்து சினிமாத் திரைக்கு வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதனடிப்படையில் எனக்கும் சிறப்பான வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். நான் நடித்துக் கொண்டிருக்கும் படம் காதலை மையப்படுத்தியது. அதிலும் தொலைக்காட்சி தொகுப்பாளராகத்தான் நடித்திருக்கின்றேன்' என்றார்.

## நாய்ச் சண்டை

வட அயர்லாந்தில் நாய்ச் சண்டை நடத்தும் ஆர்வலர்கள், படுபயங்கரமான நாய் இனங்களை உருவாக்கி வளர்த்து விற்பனை செய்கின்றனர். இப்படியான நாய் ஒன்று 5 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட் வரை விலை போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த நாய்களுக்கு, களவாடிய நரிக்குட்டிகள், நீர்க்கீரிகள் இரையாகக் கொடுத்து இரத்த வெறியூட்டப்படுகின்றது.
நாய்கள் சண்டையில் வெற்றிபெறும்போது அதன் உரிமையாளர்களுக்குப் பரிசுத் தொகை கிடைப்பதுடன் மாதாந்தப் பணமாகப் பெருமளவு பணமும் சம்பாதிக்க முடிகின்றது.
நாய்கள், வீட்டுப் பூனைகளைக் கடித்து கிழிக்கும் காணொலிகளும், நரிகளின் கழுத்தைப் பிய்க்கின்ற காணொலிகளும் நீர்கீரிகளைக் குழுவாக வேட்டையாடுவதையும் காட்டும் இரத்தத்தை உறைய வைக்கும் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பதிவாகியுள்ளன.
வேறு சில காணொலிகள் இரண்டு நாய்களுக்கிடையிலான சண்டைக் காட்சிகளைக் கொண்டுள்ளன. இரத்தம் தோய்ந்த நிலையில் பின் வாங்கும் நாய்கள், சாகும் வரை போராடும்படி மீண்டும் தள்ளிவிடப் படுகின்றன. பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்ட நாய்கள் கலப்பு செய்யப்பட்டு, பயங்கரமான புதிய இனங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

## என்ன கொடுமை சார்!



## ஆன்மீகச் சிந்தனை

மனம் புதிதாக எதையும் படைக்க முயற்சிக்காமல் தடுத்து, அனுபவ நாட்டம் கொள்ளாமல் செய்து, அதனை இறைவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடுத்துவதே தியானம். ஆனால் மனம் ஒருமைப்பாடு புதிதாகப் படைக்கவும் அனுபவிக்கவும் வழிவகுக்கிறது. தியானம், இவற்றைத் தவிர்த்து இறைவனைத் தேடும் முயற்சியாகிறது. சாதாரண மன ஒருமைப்பாடு காலமென்ற கட்டுப்பாட்டுக்குள் நடைபெறுகின்றது. இதற்கு மாறாகத் தியானம் காலத்தைக் கடந்த நிலையில் வாழ்வதற்குச் செய்யும் முயற்சியாக விளங்குகிறது.

ஞானக்கதிர்

## காளை வதை

ஸ்பெயினின் மெற்றிட்டுக்கு வட கிழக்கே உள்ள சோறிய மாகாணத்தைச் சேர்ந்த மெதினாசெலி எனும் கிராமத்தில் கொடூரமான கொண்டாட்டம் நடைபெறுகின்றது. காளை மாட்டை வேதனைப்படுத்தும் கொடூரமான கொண்டாட்டமே அது.
இது மத்திய கால கிராமிய கதைகளில் வரும் உலக அழிவுக் காட்சியல்ல. காளை மாடுகளுக்குத் தீ மூட்டி வீதி வழியே ஓடவிட்டு மகிழும் ஸ்பானிய திருவிழாவில் நடக்கும் ஒரு கொடூரமான நிகழ்வாகும்.
'காளை மாட்டின் மகிழ்ச்சி பூரிப்பு' என்று இது அழைக்கப்படுகின்றது. மாட்டை நிலத்தில் விழுத்தி, தீப்பற்றும் இரசாயனம் தோய்த்த பலகைகளை அதன் கொம்பில் இறுகக்கட்டி தீ மூட்டுகின்றனர். வேதனை தாங்க முடியாமல் அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள அடைப்புக்குள் சுழன்று சுழன்று ஓடும் போது அதிலிருந்து வாணவெடி போன்று தீப்பொறிகள் பறக்கும். அது மாத்திரமல்ல, காளை ஓடும் அடைப்புக்குள் சிலர் புகுந்து காளைக்கு மேலும் மேலும் துன்பத்தைக் கொடுப்பர். இந்தக் கொண்டாட்டம் தொடர்ச்சியாக 45 நிமிடங்கள் நடைபெறும்.
அதன் பின்னர் மாடு களைத்து விழுந்தவுடன் மாட்டை கட்டி இழுத்து கொன்று அதை இறைச்சியாக்கி, சமைத்து உண்டு மகிழ்வர்.




## ஜொல்லா (JOLLA) டப்லட்




ஸ்மார்ட் கைப்பேசிகளை உற்பத்தி செய்யும் ஜொல்லா நிறுவனம் Sailfish OS 2.0 இயங்கு தளத்தைக் கொண்ட புதிய டப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது.

7.85 அங்குல அளவுடையதும், 2048 மு 1536 Pixel Resolution உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ள இந்த டப்லட் 64dbit Quad Core Intel Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பனவற்றைக் கொண் டுள்ளது.

இவை தவிர 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகா பிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 4300 mAh மின்கலம் என்பனவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



## குண்டுகளை கண்டுபிடிக்கும் குழாய்கள்



நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குண்டுகளைக் கண்டுபிடிக்கும் சாதனத்தை யூட்டா (Utah) பல்கலைக்கழகப் பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

விரிவுரையாளர் லிங் ஷாங் தலைமையிலான குழுவினரால் உருவாக்கப்பட்ட இந்தச் சாதனம் கார்பன் நனோ ரியூப்ஸ் (Carbon Nanotubes) என அழைக்கப்படுகின்றது.

நுணுக்குக்காட்டி, இரண்டு மின் வாய்கள், என்பவற்றையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சாதனம் குண்டுகளை அடையாளம் கண்டதும் அதனைப் பயன்படுத்துவோருக்கு உண்டாகும் மின்னியல் மாற்றத்தை அறிவிக்கின்றது.

இந்தச் சாதனம் எதிர்வரும் காலங்களில் விமான நிலையங்கள் போன்ற இடங்களில் பாதுகாப்பு முறைமைகளில் பயன்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மற்றுமொரு அப்பிளிக்கேஷன் பேஸ்புக்கில்



சமூக வலைத்தளங்களின் வரிசையில் அசைக்கமுடியாத அரசனாக முதலிடத்தில் திகழும் பேஸ்புக் மொபைல் சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய பல்வேறு அப்பிளிக்கேஷன் களை அறிமுகம் செய்து வருவது தெரிந்ததே.

இவற்றின் தொடர்ச்சியாக தற்போது Face book Groups எனும் புதிய அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்துள்ளது.

இதன் மூலம் குழுக்களுக்கிடையில் தகவல்களை பரிமாறிக்கொள்ளல், குடும்பத்துடன் எப்போதும் தொடர்பில் இருத்தல், வேலைத் திட்டம் ஒன்றில் இணைந்து செயற்படுதல், மற்றும் நண்பர்களுக்கு ஆதரவு வழங்குதல் போன்ற விடயங்களைச் செய்ய முடியும்.

இந்த அப்பிளிக்கேஷனை iOS மற்றும் Androi- சாதனங்களில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## யோராபோன்— 2 (YOTAPHONE 2 ) ஸ்மார்ட் கைபேசி விரைவில்

இரண்டு திரைகளைக் கொண்ட முதலாவது ஸ்மார்ட் கைப்பேசியான YotaPhone கடந்த வருடம் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் YotaPhone 2 ஐ வடிவமைப்பது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது. இதன் திரை 4.7 அங்குல அளவுடையதாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன், முன்னர் வெளியாகிய YotaPhone , 5 அங்குல அளவு, 1920 X 1080 Pixel Resolution உடைய AMOLED திரையையும், Quad Core 2.3GHz Qualcomm Sna pdragon 800 Processor ஐயும் கொண்டதாகக் காணப்பட்டது.





## மோட்டோ எக்ஸ் (MOTO X) ஸ்மார்ட் கைபேசி

கூகுள் நிறுவனம் Androi- இயங்கு தளத்தின் புதிய பதிப்பான Android லொலிபப்பை (Lollipop) அறிமுகம் செய்துள்ள நிலையில் பல சாதனங்களில் இந்த இயங்குதளம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இந்தநிலையில்தற்போதுமோட்டோ எக்ஸ் (Moto X )ஸ்மார்ட் கைப்பேசியும் Android Lolli pop இயங்குதளத்தைக் கொண்டதாக அறிமுகமாகவுள்ளது.

இந்தக் கைபேசி, 5.2 அங்குல அளவு, 1920 மு 1080 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 2.5GHz வேகத்தில் செயல்படக்கூடிய Quad Core Snapdragon 801 Processor, பிரதான நினைவகமாக 2GB of RAM மற்றும் 16GB, 32GB சேமிப்பு நினைவகங்களைக் கொண்ட பதிப்பாக வெளிவரவுள்ளது.

மேலும் இந்தக் கைபேசியில் 13 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புகளை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிக வினைத்திறன் கொண்ட வயர்லெஸ்




இணைய வலையமைப்பில் தற்போது வயர்லெஸ் தொழில்நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு விஸ்கர் (Whisker) என்ற வயர்லெஸ் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனம் 4 மைல்கள் தொலைவுக்கு சமிக்ஞையை வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 5 வருடங்களுக்கு செயற்படக்கூடிய இரண்டு AAA மின்கலங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்தச்சாதனைத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து வீடுகள், ரோபோக்கள், கார்கள், செல்லப் பிராணிகள் என்பவற்றைக் கண்காணிக்க முடியும். தற்போது நிதி திரட்டலை எதிர்பார்த்து Kickstarter தளத்தில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ள இந்தச் சாதனம் விரைவில் விற்பனைக்கு வருகின்றது.

## அப்பிள் கணினிகளுக்கான ஜிமெயில்




கூகுளின் மின்னஞ்சல் சேவையைப் பொதுவாக இணைய உலாவிகளில் வைத்தே அதிகளவானோர் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் விண்டோஸ், அன்ரோயிட் இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களில் இணைய உலாவிக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய ஜிமெயில் அப்பிளிக்கேஷன்கள் காணப்படுகின்றன. இருந்த போதிலும் அப்பிளின் மெக் (Mac) கணினிகளில் பயன்படுத்தக்கூடிய ஜிமெயில் அப்பிளிக்கேஷன் தற்போதுதான் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை சைவ் (Zive) எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த அப்பிளிக்கேஷனின் புரமோஷனுக்காக கிக்ஸ்டர் (Kickstarter) தளத்தில் வெளியிடப்பட்டுள்ள துடன் விரைவில் பயனர்களின் பாவனைக்கு விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்பும் கூடாது

போதைப் பொருள் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் ஐவரையும் இலங்கை ஜனாதிபதி விடுவித்து விட்டார். இந்த முடிவு எடுக்கப்பட்டதற்குப் பின்னால் அயல் உறவு, சர்வதேச நெருக்கடி போன்றவை கருத்தில் எடுக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அது முறையும்கூட. ஆனால் ஒரு கண்ணில் வெண்ணெயை வைத்த ஜனாதிபதி, மறு கண்ணில் சுண்ணாம்பை வைத்துள்ளமைதான் ஏற்றுக் கொள்ள முடியாத தாக இருக்கின்றது.

இந்தியாவில் இருந்து போதைப்பொருள் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எண்மர். அவர்களில் ஐவர் இந்திய மீனவர்கள், எஞ்சிய மூவர் இலங்கைத் தமிழ் மீனவர்கள். ஒட்டுமொத்தமாக 8 பேருக்கும் சேர்த்தே நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்திருந்தது. ஆனால் இந்திய மீனவர்கள் ஐவருக்கும் மட்டுமே தண்டனை நீக்கமும் விடுதலையும் கிடைத்திருக்கிறது. எஞ்சிய யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்த தகவல் ஏதும் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்படவில்லை. விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களும் குடா நாட்டு மீனவர்களும் சேர்ந்து போதைப் பொருள் கடத்தினார்கள் என்பதே முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டு. அதன் அடிப்படையி லேயே அனைவருக்கும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனையில் இருந்து இந்திய மீனவர்களை விடுவிக்க முடியும் என்றால், குடாநாட்டு மீனவர்களையும் விடுவிக்க முடியும் என்பதுதான் தர்க்க நியாயம்.

போதைப் பொருள் கடத்துவது அவர்களின் தொழில் அல்ல என்பதை, அவலப்பட்டு நிற்கும் அந்த மீனவர்களின் குடும்பங்கள் தெளிவாகக் கூறுகின்றன. அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் தெரியாமல் தவறு செய்திருந்தால்கூட அதனை மன்னித்து அவர்களை விடுவிக்க எல்லா நியாயங்களும் இருக்கின்றன என்பதையே இந்திய மீனவர்களின் விடுதலை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே யாழ்ப்பாணத்து மீனவர்கள் மூவரது தண்டனையையும் குறைத்து அவர்களையும் விரைவில் விடுவிப்பதற்கு ஜனாதிபதி கருணை காட்ட வேண்டும். கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களும் தமிழர்களே. சிலர் கடலுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்; சிலர் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒரு பகுதியினரை விடுவித்து மற்றையவர்களை சிறையிலேயே வைத்திருப்பது ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் தடவும் செயலுக்கு ஒப்பானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனைச் செய்யக்கூடாது.

ஏற்கனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் ஜனாதிபதி இவ்வாறு ஈழத் தமிழர்கள்பால் இரக்கமின்றி நடந்துகொண்டு வருகின்றமை தமிழர்களிடம் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்ச் சமூகம் வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில் இந்த மீனவர்களைத் தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைத்திருப்பது தமிழர்கள் இந்த நாட்டில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்படுகிறார்கள் என்பதற்கான ஆகப்பிந்திய உதாரணமாகிவிடும். தேர்தலும் கருக்கட்டியுள்ள இந்த நேரத்தில் குடாநாட்டு மீனவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களையும் விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# எதையும் செய்யத் துணியும் அடியாள்களால் நிர்வகிக்கப்படும் பல்கலை ஒரு துரதிர்ஷ்டம்

## சரவணபவன் எம்.பி. நாடாளுமன்றில் காட்டம்



தங்களது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எதையும் செய்யத் துணியும் அடியாள்களைக்கொண்டு நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகம் ஒன்றை நாம் கொண்டிருக்கிறோம் என்பது துரதிர்ஷ்டவசமானது என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வரவு - செலவுத் திட்டத்தின் உயர் கல்வி அமைச்சு ஒதுக்கீட்டில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்களும், களனி பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பீடமும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்தர மருத்துவ பீடமும், மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல், பெற்றோலியம் மற்றும் விண்வெளிப் பொறியியல் பீடங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

25 ஆயிரம் மாணவர்களுக்கான விடுதி வசதி துரித செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது. மஹாபொல புலமைப்பரிசில் தொகை ஒவ்வொரு மாணவனுக்கும் 4 ஆயிரம் ரூபாவாக அதிரிக்கப்படுவதன் மூலம் வறிய மாணவர்கள் நன்மையடையவுள்ளனர். க்ல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுதல் போன்ற பிரேரணைகள் வரவேற்கத்தக்கவை.

28 செப்ரெம்பர் 2014ஆம் திகதியில் வெளியான 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை மூலம் அடுத்த வருடம் முதல் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படும் மாணவர் தொகை 25 ஆயிரத்திலிருந்து 35 ஆயிரமாக உயர்த்தப்படுமென அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க உறுதியளித்திருக்கிறார்.

அரசின் இந்த உத்வேகத்தை நான் பாராட்டுகிறேன். சனத்தொகையில் 18-22 வயதெல்லையில் உள்ளவர்களில் 8 சதவீதத்தினர் உயர் கல்வியைப் பெறமுடியாவிட்டால் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை எட்டமுடியாது என்பது துறைசார் நிபுணர்களின் கருத்தாக உள்ளது. மலேசியா போன்ற நாடுகள் இந்த இலக்கை எட்டியுள்ளன.

உயர் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை அடுத்த வருடத்தில் அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. 2014இல் 19,562 பில்லியனாக இருந்த செலவு 2015இல் 20,532 பில்லியனாக அதிகரித்திருக்கிறது. இதன் அடிப்படையில் வெறும் 4.9% உயர்ச்சியே காணப்படுகிறது. இது கௌரவ அமைச்சர் உறுதியளித்த மேலதிக மாணவர்களை உள்வாங்குவதற்கான செலவினத்துக்குப் போதுமானதல்ல. அவ்வாறே 2014இன் மூலதனச் செலவினங்களான 13, 244 பில்லியன் 2015இல் 16,356 பில்லியனாக அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம் பாராட்டத்தக்க 23.5 சதவிகித உயர்ச்சி காணப்படுகின்றது. எனினும், இவ்வாறான முக்கியமானதுறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடப்படும்போது மிகக் குறைவாக இருப்பது கவனத்துக்குரியது.

கட்டடங்களால் மாத்திரம் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க முடியாது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். நீண்டகால போர் எம்மை வேரறுப்பதற்கு முன்னர் ஓலைகளால் வேயப்பட்ட பாடசாலைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்கள்தான் வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கித் தந்தார்கள். ஆசியாவின் முதலாவது பல்கலைக்கழகமாக வட்டுக்கோட்டையிலுள்ள பற்றிக்கோட்டா செமினறி விளங்கியது. பெரிதாக கட்டடங்கள் எதுவுமில்லாமல் அர்ப்பணிப்பு கொண்ட ஆசிரியர்களைக் கொண்டு அமெரிக்க மத ஸ்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்ட கலாசாலையே இதுவாகும். 1850ஆம் ஆண்டு இந்தக் கலாசாலைக்கு விஜயம் செய்த காலனித்துவ செயலாளர் சேர். ஜேம்ஸ் எமர்ஸன் தனது புத்தகத்தில் இந்தக் கலாசாலையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தக் கலாசாலையின் மாணவர்களின் அறிவுக் கூர்மை ஆச்சரியப்பட வைக்கிறது. கலாசாலையில் கற்பிக்கும் முறையும் பாட நெறிகளும் இந்த பற்றிக்கோட்டா செமினறி ஐரோப்பாவிலுள்ள பல முன்னணிப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் அளவுக்கு தரத்தைக் கொண்டுள்ளது"

பல்கலைக்கழகங்களின் அபிவிருத்தி என்பது வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை எட்டக்கூடியதாக அமையவேண்டும் எனக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஆங்கிலப் புலமையுள்ள விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் இளைய தலைமுறையினர் தமது அறிவை விருத்தி செய்துகொள்ள வழிசமைக்க வேண்டும். தாய்மொழி மீது பற்றுக்கொண்டுள்ள எமக்கு உயர் கல்விக்காக ஆங்கிலத்தில் முழுச் சிரத்தை செலுத்துவது கடினமே. எனினும், ஆங்கில அறிவு இல்லாமல் எம்மால் பாடப் புத்தகங்களை வாசித்து விளங்கிக் கொள்ளவோ, எமது கண்டுபிடிப்புகளை தெரிவிக்கும் கட்டுரைகளை எழுதவோ முடியாது. எமது விரிவுரையாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவதை நான் நியாயப்படுத்தும் அதேவேளை, அவ்வாறான கொடுப்பனவுகள் வீண் விரயமாகாமல் இருக்கவேண்டும் எனவும் எதிர்பார்க்கிறேன். எனவே, திறமையும் அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களை நியமித்து எமது வருங்கால சந்ததியினரின் முன்னேற்றத்துக்கு உதவவேண்டுமென்பதே எனது அபிலாஷையாகும்.

சரியாக நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு சிறந்த நிர்வாக சபையும், சிறந்த உபவேந்தரும் அவசியம். அவர்கள் தங்களது நண்பர்களைத் திருப்திப்படுத்துவதை விடுத்து உண்மையில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முயற்சிப்பார்கள். இந்த இடத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண ஆசிரியர்கள் சங்கம் (JUSTA) கவனமாகத் தயாரித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றை மேற்கோள் காட்ட விரும்புகின்றேன். இந்த அறிக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு எவ்வாறு தராதரமற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை 'இணைப்பு - 1' எனக் குறிப்பிட்டு இங்கு சமர்ப்பிக்கிறேன்.

இந்த விடயம் தங்களது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டால் அது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் 'ஐலண்ட்' பத்திரிகை மூலம் தெரிவித்திருந்தார். அதற்கேற்ப (JUSTA) அந்த முறைப்பாட்டை எழுத்துமூலம் சமர்ப்பித்தது. ஆனால், இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆணைக்குழு அத்தகைய ஒழுங்கீனங்களை மூடி மறைப்பதில் திறமை கொண்டதாக இருக்கிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் பொய் கூறுவார் என நான் நம்பவில்லை. அவர் தேவனின் தூதுவர். அவரிடம் கேட்டால் JUSTA தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு சாட்சியமளிப்பார்.

தகுதியற்றவர்களை பேராசிரியர்களாகவும், உபவேந்தர்களாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கத்தவர்களாகவும் நியமித்துள்ளமை தொடர்பில் அரசின் மீது நான் உண்மையில் அதிருப்தி கொண்டுள்ளேன். அதற்காகக் கண்டனம் தெரிவிக்கிறேன்.

நாங்கள் அறிந்தவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் குறைந்த தகுதிகளுடன் அரசின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒருசிலர் முழு நேரப் பேராசிரியர்களாக நடித்த போதிலும் அவர்கள் ஒருபோதும் அவ்வாறு இருந்ததில்லை. இவர்கள் அனைவருமே யாழ். அமைச்சரின் பட்டியலில் இருந்து உயர் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட - பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களும் குடிகாரர்களும் என்பதில் தவறில்லை. எனவே, தங்களது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எதையும் செய்யத் துணியும் அடியாள்களைக்கொண்டு நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகம் ஒன்றை நாம் கொண்டிருக்கிறோம் என்பது துரதிர்ஷ்டவசமானது. அவர்கள் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதுடன் மதுபோதையால் கூட்டங்களுக்கு கிரமமாக வராத காரணத்தால் பதவி நீக்கப்பட்டால் மீண்டும் நியமனத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய திறனும் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

(தொடரும்)

அன்ரன்

# சாவைத் தோளில் தாங்கி வாழ்ந்தோர் நினைவு –1

யாழ்ப்பாணத்தில் 10 வருடங்களுக்கு முன்பு வரையும், வன்னியில் 5 வருடங்களுக்கு முன்பு வரையும், இன்றைய நாள் பெரும் எழுச்சிக்குரியதாக இருந்தது. 21 ஆம் திகதி முகிழும் நெருப்பு 27ஆம் திகதி பெரும் தீச் சுவாலையாகக் கொழுந்து விட்டமை வரலாறு.

வீடுகளின் முன்புறங்கள், வீதியோரங்கள் இந்த ஒரு வார காலத்தில் துப்புரவு செய்யப்பட்டிருக்கும். அதன் மூலம் நாடே தூய்மை பெற்றிருக்கும். பற்றைகள், காடுகள் அழிக்கப்பட்டிருக்கும். நகரங்களும் கிராமங்களும் புதுக் குமரிகளின் பொலிவோடு சிரித்துக் குலுங்கும். அதனை வெறுமனே எல்லோருமே நிர்ப்பந்தத்துக்காகச் செய்தார்கள் என்று சொல்லமுடியாது. ஆத்மார்த்தமாகவே பலரும் செய்தார்கள்.

திருவிழாக் காலங்களிலோ பெருநாள் காலங்களிலோகூட ஊர் கூடி இப்படி ஒரு நாளை, வாரத்தை எதிர்கொள்ளும் முறையை என் வாழ்கையில் ஒருபோதும் நான் கண்டதில்லை. 1990க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கு முழுவதிலும் அதன் பின்னர் 2008வரையில் வன்னியிலும் தான் அதனைப் பார்க்க முடிந்தது.



பெருநாள் கொண்டாட்டங்களுக்காக தமது வீடுகளைப் பெருக்கிக் கழுவிச் சுத்தம் செய்யப் பழக்கப்பட்ட தமிழ்ச் சனம், ஒருபோதும் தெருவை, தெருவோரங்களை அருகிலிருந்த காணிகளை சுத்திகரித்த வரலாறு ஒன்று இருந்ததில்லை. அது நடந்தது நவம்பர் மூன்றாம் வாரத்தில் மட்டும்தான்.

இன்று ஆட்டிப் படைக்கும் டெங்குக் காய்ச்சல் அன்று இவ்வளவு மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததாக எனக்கு ஞாபக மில்லை. ஒருவேளை, வருடா வருடம் இந்த ஒரு வார காலத்தில் நிகழ்ந்து வந்த சுத்திகரிப்பும் அதற்கொரு காரணமாக இருந்திருக்கக்கூடும்.

அந்த ஒருவாரம் தேசிய எழுச்சியை மட்டுமல்ல, கொண்டாட்டங்களையே அறிந்திராத தலைமுறைக்கு அதன் ஒரு சில பரிமாணங்களையாவது தொட்டுக் காட்டியது. வெற்றிகள் மட்டுமல்ல, வெற்றிக்காக மடிந்தவர்களின் நினைவுகளும், சோகங்களும்கூடக் கொண்டாடப்பட வேண்டியவையே என்பதைக் கற்றுத் தந்தது.

வீதிகள் வண்ண மயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சந்திக்குச் சந்தி படங்கள் வைத்தபடி எழுப்பப்பட்டிருந்த நினைவுத் தூபிகள், மாடங்கள் அழகுபெற்றிருக்கும். அலுவலகங்களில் எல்லாம் அஞ்சலிக்காகத் தனியான மேடை அமைக்கப்பட்டிருக்கும். சனசமூக நிலையங்களும் பொது அமைப்புகளும் தங்கள் ஊரில், உறவில் ஈகம் செய்தவர்களை நினைவுகூர்ந்து எழுச்சி பெற்றிருக்கும்.

தங்கள் சுக துக்கங்களை மறந்து எதிர்காலத்துக்காக, விடிவுக்காக, வரவிருக்கும் சந்ததிக்காக உயிரையும் ஈகம் செய்த மறவர்களை நினைவில் இருத்தி, சிரசில் ஏற்றி இனமே எழுச்சி கொண்டிருக்கும். வீதிகள் எல்லாம் எழுச்சிப் பாடல்களால் நிறைந்திருக்கும். அங்கிருந்து தவழ்ந்து வரும் காற்று, வீடுகள் அனைத்தை[...]ம் நிறைத்திருக்கும். வானம் சிவப்பும் மஞ்[...]ளும் போர்வை போர்த்திருக்கும்.

சாரி[...]ரியாக மக்கள் துயிலும் இல்லங்களை நே[...]கிச் சென்று கொண்டிருப்பார்கள். இப்[...]து எல்லாமும் மாறிவிட்டது. நினைவு கள[...] தவிர.

---

## இது மரநடுகை மாதம்



# மரம் நடுகையில் குழந்தைகள்

ப.அருந்தவம்
ஆசிரிய ஆலோசகர்

மரங்களை நடுவது சூழலியல் ரீதியில் ஒரு முக்கியமான செயற்பாடாக அமைந்துள்ளதை யாவரும் அறிவோம். இதேவேளை குழந்தைகளிடம் மரம் நடுகை மேற்கொள்ளும் பண்பை வளர்ப்பது அவர்களது ஆளுமைக்கு இடப்படும் அத்திபாரமாகும் என்பதை அறிவோமா?

### ஆளுமையை வளர்க்கும்

குழந்தைகள் விளையாடுவதன்மூலம் உடலளவில் நல்ல முன்னேற்றம் பெறுவது போன்று, மரங்களை நட்டுப் பராமரிக்கும்போது உடலளவில் மட்டுமல்லாது, மனதளவிலும் பெரிய முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன.

குழந்தைகள் ஒரு விதைபோட்டு மரம் வளர்க்கும்போது அவர்களிடம் தன்னம்பிக்கையும்கூடவே வளர்கிறது. அம்மரங்களைப் பேணிப் பாதுகாக்கும்போது சாந்தகுணமும் பெருகுகிறது. மற்றும் அவர்களிடத்தே நன்றியுணர்வும் அதிகரிக்கிறது.

வீட்டுத்தோட்டத்தில் மரங்களை திட்டமிட்டு நடும் பிள்ளைகளால் எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு, பண்பையும் கூடவே கற்றுக்கொள்ள முடிகிறது. இத்துடன் ஒரு கருமத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க முடியும் எனும் ஆற்றலும் வளர்கிறது.

மரங்களை நட்டுப் பராமரிக்கும் பிள்ளைகளிடத்தே கவனமாகச் செயற்படல், மனதை ஒருமுகப்படுத்தல், புதிய நுட்பங்களைக் கைக்கொள்ளும் ஆற்றல், பொறுமை போன்றவற்றுக்கும் களம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இது பிள்ளையின் எதிர்கால வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாகவும் அமைகிறது.

### கற்கும் ஆற்றல் விருத்தியடையும்

நன்கு வளர்ந்த பசுமை நிறைந்த பூத்துக் குலுங்கும் மரஞ்செடிகொடிகளை உற்றுநோக்குவதனால் சங்கடமான மனமும் அமைதிபெறும், மன உளைச்சல்கூட நீங்கி கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலை ஏற்படும்.

கணினி முன்பாக பலமணி நேரம் செலவிட்டவர்களும், அதிகநேரம் புத்தகங்களை வாசித்தவர்களும் சிறிதுநேரம் பசுமையான தாவரங்களைப் பார்ப்பதன் மூலம் புத்துணர்வு பெறுவார்கள்.

### செல்லப் பிராணிக்குப் பதில் மரங்கள்

எப்படி ஒரு செல்லப் பிராணியொன்றை வளர்க்கும்போது மனம் ஆறுதல் அடைகிறதோ, அதே போன்று மரங்களை வளர்ப்பதன் மூலமும் ஆறுதல் பெற முடிவதுடன் சமூகத்துக்கும் நன்மை தரும் வகையில் சூழல் சமநிலை பேணலில் (வளிமண்டல ஒட்சிசன் காபனீர் ஒட்சையிட் வீதம் பேணல்) நம்மாலியன்ற பங்களிப்பை வழங்கக் கூடியதாகவும் அமைகிறது.

### பெற்றோரைப் பேணும் பண்பை வளர்க்க

தாவரங்களை நட்டுப் பராமரிக்கும் பிள்ளைகளிடத்தே பெற்றோரின் முதுமைக் காலத்தில் அவர்களைப் பேணிப் பராமரிக்கும் ஆற்றல் வளர்வதாக இந்திய ஆய்வொன்றும் வெளிப்படுத்தியுள்ளது.

தற்காலச் சூழலில் பெற்றோரைப் பேணும் பண்பு அருகிவரும் காலத்தில் பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தில் தாவரங்களைப் பேணும் பண்பை வளர்த்து பெற்றோராகிய எமது முதுமையில் அவர்களின் ஆதரவு வளர்வதற்கான மனப்பாங்கை வளர்க்கலாம் அல்லவா?

### வாழ்ந்து காட்டுவோம்

நாம் பிள்ளைகளுக்கு மரம் நடுங்கள் எனச்2 சொல்லித் தருவதைவிட, நாங்களும் மரங்களை நடும் முயற்சியில் ஈடுபட்டு பல்வேறு அனுபவங்களையும் பிள்ளைகள்பெற வழிசமைப்பது சாலச் சிறந்ததாகும்.



---

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



'ஸ்டீவ் வாவ்' உடன் சச்சினின் உறவு வெகு வேடிக்கையானதாக இருந்தது என்பதை நூலை வாசிக்கிற பொழுது தெரிகிறது. ஸ்டீவ் வாவ் எதிரணி தீவிரமாகத் தாக்கும்போது இன்னமும் பலமாக ஆடுவார் என்பதால், அவரை மனதளவில் பாதிக்க அவர் ஆடும்போது இந்திய அணியில் ஒருவரும் பேசாமல் இருந்து அவரைச் சீக்கிரமாக அவுட் ஆக்கும் பாணியைப் பின்பற்றி இருக்கிறார்கள். பெப்சி கோப்பையின் போட்டியில் சச்சின், ஸ்டீவ் வாவ்வை அவுட்டாக்கி அணியை வெற்றியை நோக்கித் திருப்பினார். எனது பந்துகளை எதிர்கொள்ள ஸ்டீவ் திணறினார் என்றே எண்ணுகிறேன் என்று எழுதுகிறார் சச்சின்.

கொகாகோலா கோப்பையின் இறுதிப்போட்டிக்கு தேர்வாக வேண்டிய முக்கியமான போட்டியில் இந்திய அணிக்கு 17 ஓவர்களில் 138 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மணல் புயல் தாக்கியபடியால் சச்சின் திடகாத்திரமான ஆடம் கில்கிரிஸ்ட் பின்னால் ஒளிந்து கொண்டார். அதற்குப் பின் வெறும் 13 ஓவரில் 130 ரன்கள் என்று இலக்குச் சொல்லப்பட்டது. 100 ரன்கள் அடித்தால் அணி தகுதி பெற்றுவிடும் என்றார்கள். சச்சின் 130 ரன் இலக்கு என்று களம் புகுந்து மணல் புயல் போல ஆடினார். நடுவர் தவறாக அவுட் கொடுத்து அனுப்பியும் அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்து இருந்தது. 272 ரன்கள் இலக்காக வந்தது. முதல் ஓவரில் சச்சின் 5 பந்துகளைத் தடுத்து ஆடினார். முதல் 5 ஓவரில் வெறும் 12 ரன்கள் மட்டுமே அடிக்கப்பட்டிருந்தன. அடுத்த ஓவரில் பவுண்டரி, அடுத்து வந்த பவுன்சரில் சிக்சர் என்று சச்சின் ஆரம்பித்து வைத்தார். பந்தெல்லாம் எல்லைக்கோட்டையே எட்டின. அணி கொகாகோலா கோப்பையை வென்றது. சச்சினின் 25 வது பிறந்தநாள் அன்று என்பது குறிப்பிடத்தக்கது.

### தரையில் படுத்து மகளை ஏந்திய தகப்பன் சச்சின்

டொன் பிராட்மனை அவரின் அழைப்பின் பெயரில் வோர்ன் மற்றும் சச்சின் சந்தித்தபோது, இன்றைய களத் தடுப்பின் தரத்தில் நான் அவ்வளவு ரன்கள் அடிக்க முடியாது. ஆனாலும், இந்த வயதில் ஆடினால் ஒரு 70 என்கிற சராசரியைத் தொடுவேன் என்று எண்ணுகிறேன்

[ ÀV«VD , «Vâ| [

(தொடரும்)

## இந்தியாவில் வாழும் 179 வயது முதியவர்



உலகிலேயே மிக அதிக வயதான மனிதர் ஒருவர் இந்தியாவின் வடக்கே உள்ள வாரணாசியில் வாழ்வதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

வாரணாசியில் வாழ்ந்து வரும் மகாஸ்தா முராசி என்ற 179 வயது முதியவர் 1835 ஆம் ஆண்டு பிறந்ததாக அறிய முடிகின்றது. பெங்களூரில் பிறந்து வளர்ந்த அவர் கி.பி. 1903 ஆம் ஆண்டு முதல் வாரணாசியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். 122 வயது வரை காலணி தைப்பவராக தொழில்புரிந்த அவர் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார். மகாஸ்தா முராசியின் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டைகள் அனைத்திலுமே அவர் 1835 ஆம் ஆண்டு பிறந்தவர்தான் என்று பதிவாகியுள்ளது. ஆனால் இதுவரை இவர் 179 வயதுடையவர்தானா என்பதை உறுதிப்படுத்த எந்த மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# பிஜிக்கு நிதி உதவி அறிவித்தார் மோடி

பிஜி, நவ.21



பிஜியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, அந்த நாட்டுக்கு இந்திய ரூபா 495 கோடி கடன் வழங்கப்படும் என்று அறிவித்தார். மேலும், பிஜி உட்பட 14 பசுபிக் கடல் தீவு நாடுகளின் பிரஜைகளுக்கும் உடனடி விசா வசதியையும் அவர் அறிவித்தார். பிஜி நாட்டு பிரதமர் பிராங்க் பைனிமராமாவுடன் அவர் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, இரு தலைவர்களும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது மோடி கூறியதாவது:

"பிஜியுடனான எமது உறவில் இது புதிய தொடக்கமாகும். நமது பழைமையான உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் வாய்ப்பாக எனது இந்தப் பயணத்தைப் பார்க்கிறேன். இங்கு மின்சார உற்பத்தி நிலையத்தை அமைக்கவும், கரும்புத் தொழிற்துறையை மேம்படுத்தவும், கிராமப்புற மேம்பாட்டுக்கும் பிஜிக்கு 80 மில்லியன் டொலர் கடன் வழங்கப்படும்.

இந்தியாவும் பிஜியும் தங்கள் ராணுவ, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்துள்ளன. மேலும் 14 பசுபிக் தீவு நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கும் இந்தியாவுக்கு வந்த பின் விசா பெற்றுக் கொள்ளும் வசதி செய்து தரப்படும்.


பிஜி நாடாளுமன்றத்தில் நூலகம் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கும் நிதியுதவி செய்யப்படும். தவிர பிஜியைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியாவில் கல்வி உதவித் தொகைகள் இரட்டிப்பாக்கப்படும். இந்தியாவுக்கும், பசுபிக் தீவு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில் டில்லியில் வர்த்தக அலுவலகம் ஒன்றை இந்த நாடுகள் திறப்பதற்கு உதவ இந்தியா தயாராக உள்ளது" -என்றார் மோடி. முன்னதாக, இந்தத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் மோடிக்கும் பைனிமராமாவுக்கும் முன்னிலையில் இரு தரப்பு அதிகாரிகள் இடையே கையெழுத்தாகின. தொடர்ந்து அந்த நாட்டு தேசிய பல்கலைக்கழக மாணவர்களிடையே பேசிய மோடி செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக இந்தியா உருவாக்கிய மங்கள்யான் விண்கலத் திட்டத்தில் உதவியதற்காக பிஜிக்கு நன்றி தெரிவித்தார். (ரி)

## இணையத்தள பாவனையில் இந்தியா 2ஆம் இடத்தில்

உலகளவில் இணையத்தளம் பயன்படுத்தும் நாடுகளின் வரிசையில் இந்தியா 2 ஆம் இடத்துக்கு முன்னேற உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்போது இணையத்தளத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 213 மில்லியனாக உள்ளது. இது எதிர்வரும் டிசெம்பர் இறுதிக்குள் 303 மில்லியனாக அதகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளவில் இணையத்தளம் பயன்படுத்தும் நாடுகளின் வரிசையில் சீன மக்கள் முன்னிலை வகிக்கின்றனர். இதற்கு அடுத்தபடியாக அமெரிக்கர்களும் மூன்றாவதாக இந்தியாவும் உள்ளது. தற்போதைய நிலவரப்படி அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி இந்தியா இரண்டாம் இடத்திற்கு முன்னேற உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (ரி)



## தொலைநோக்குத் திட்டம் குறித்து அமெரிக்கா – இந்தியா ஒப்பந்தம்

சென்னை, நவ.21

தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023ஆம் ஆண்டு மதிப்பீடு மற்றும் செயல்முறைத் திட்டத்துக்காக அமெரிக்க நிறுவனத்துடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றை மேற்கொண்டுள்ளது.

இந்தத்திட்டம் தொடர்பில் அதிக பயன் அளிக்கும் திட்டங்களை உருவாக்கவும் அமெரிக்க நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்து கொள்ளும் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி சட்டசபையில் அறிவித்திருந்தார். அதன்படி உலக அளவில் மிகச்சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமான மாசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரசின் உயர் அதிகாரிகள் பலர் அதில் பங்கேற்றனர். இந்த ஒப்பந்தப்படி பாடசாலைக் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் சத்துணவு ஆகிய முக்கியதுறைகளில் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாடு செய்ய, உலக அளவில் புகழ் பெற்ற சிறந்த பொருளாதார நிபுணர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்படுவார்கள். (ரி)

## சர்ச்சைக்குரிய சாமியார் ராம்பால் புதனன்று கைது

ஹரியானா, நவ.21



ஹரியாணா மாநிலத்தில் சர்ச்சைக்குரிய சாமியார் ராம்பாலை பொலிஸார் புதன் கிழமை இரவு கைது செய்தனர். ஹரியானாவின் ஹிஸார் மாவட்டத்தில் உள்ள பர்வாலா நகரில் ஆசிரமரம் ஒன்றை நடத்தி வரும் சாமியார் ராம்பால் மீது கொலை உள்ளிட்ட வழக்குகள் பதிவாகியிருந்தன. இந்த வழக்குகள் தொடர்பில் அவரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் செவ்வாய்க் கிழமை அந்த ஆசிரமத்துக்குச் சென்றனர். எனினும், ராம்பாலின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதால் சாமியாரைக் கைது செய்ய இயலவில்லை. இந்தநிலையில், ஆசிரமத்துக்குள் இருந்த 15,000 பேரை பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன் கிழமை வெளியேற்றினர். அதன்பின்னர் சாமியார் ராம்பாலைக் கைது செய்தனர். (ரி)



## மனிதர்களாகும் குரங்குகள்

இந்தியாவின் பீகார் மாநிலம் பெட்டிய மாவட்டத்தை சேர்ந்த உதேஷ் மாடோ என்பவர் தான் வளர்த்து வந்த ராமு என்ற ஆண் குரங்குக்கும், ராம்துல்லாரி என்ற பெண் குரங்குக்கும் பிரமாண்டமான முறையில் திருமணம் செய்து வைத்தார். இதற்காக அவர் திருமணப் பத்திரிகை அச்சடித்ததுடன், இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தும், மணமக்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றார். இத்திருமணத்தில் 200 கிராம மக்கள் கலந்து கொண்டனர். (ரி)

## பலஸ்தீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதர் – சுஷ்மா சந்திப்பு

டில்லி, நவ.21

இந்தியா வந்துள்ள பலஸ்தீன நாட்டு ஜனாதிபதியின் சிறப்புத் தூதர், நேற்று முன்தினம் டில்லியில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்துப் பேசினார்.

பலஸ்தீன ஜனாதிபதி தனது சிறப்புத் தூதராக மருத்துவர் நபில் ஷாத்தை டில்லிக்கு அனுப்பி வைத்துள்ளார். நேற்று டெல்லி வந்த நபில், வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மாவை சந்தித்தார். கடந்த ஜூலை மாதம், இஸ்ரேல், பலஸ்தீனம் நடத்தி வந்த தீவிரத் தாக்குதலின் பின்னணியில், பலஸ்தீனம் மீதான இந்தியாவின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்று கூறியிருந்தார். அதே சமயம், இந்திய அரசோ, இஸ்ரேல் தாக்குதலைக் கண்டிக்கவில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும் மத்திய அரசு மறுத்து வந்தது. காஸா முனையில் அப்பாவி பலஸ்தீனர்கள் கொன்று குவிக்கப்பட்ட நிலையில் அதுகுறித்து நாடாளுமன்றத்தில் மத்திய அரசு விவாதிக்க முன்வராதமை சலசலப்பை ஏற்படுத்தியது. (ரி)



# இராமேஸ்வரம் மீனவர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாட்டம்

## மீனவர்கள் விடுதலையை அடுத்து

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இலங்கை அரசு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்துள்ளதை அடுத்து மகிழ்ச்சி அடைந்த தமிழக மீனவர்கள், பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து கிளாடுவின் என்பவரது படகில் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், லாங்லெட், பிரசாந்த் ஆகிய 5 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் அன்று இரவு மீன்பிடித்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்துச் செல்லப்பட்டனர். பின்னர் இவர்கள் போதைப் பொருள் கடத்தி வந்தாகக் கூறி பொய் வழக்கு போடப்பட்டது. மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில் தமிழக மீனவர்களுக்கு ஆதரவாக



வழக்காட இலங்கை சட்டத்தரணிகள் இருவரை தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்திலிருந்து கொழும்பு உயர் நீதிமன்றத்துக்குத் திடீரென மாற்றப்பட்டது. கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில், போதைபொருள் கடத்திய குற்றத்துக்காக இராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் 3 பேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை அறிந்த இராமேஸ்வரம் மீனவர்கள் பெரும் வன்முறையில் ஈடுபட்டதுடன், தமிழகம் முழுவதும் அரசியல் கட்சிகளும், மீனவ அமைப்புகளும் போராட்டங்கள் நடத்தி வந்தன. அதனைத் தொடர்ந்து மத்திய அரசு இந்த வழக்கில் மேன்முறையீடு செய்து மீனவர்களை தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்க நடவடிக்கைஎடுப்பதாக அறிவித்தது. மேலும் இந்த வழக்கின் மேல் முறையீட்டு செலவுக்காக தமிழக அரசு ரூ.20 லட்சத்தை இந்திய தூதரகத்திற்கு அனுப்பியது. அதனைத் தொடர்ந்து இந்தியத் தூதரக அதிகாரிகள் கடந்த 14 ஆம் திகதி மேன்முறையீட்டுமனுவை இலங்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். (வ-ரி)

## விண்ணில் சுற்றும் ரஷ்ய மர்ம விண்கலம்

மொஸ்கோ, நவ.21

ரஷ்யா இரகசியமான முறையில் விண்கலம் போன்ற மர்ம இயந்திரத்தை விண்ணில் செலுத்தியுள்ளமை அம்பலமாகியுள்ளது.

கடந்த மே மாதம் இந்த இயந்திரம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்கள் இரகசியமாகப் பேணப்பட்டுவந்தன.

இந்நிலையில், தற்போது அது விண்ணில் பறப்பதை சில நாடுகளின் விண்வெளி நிறுவனங்கள் கண்டுபிடித்துள்ளன. தெற்கு பசிபிக் கடலின் மீது அது பறந்தபோது இது கண்டறியப்பட்டது.

ஆரம்பத்தில் இது விண்ணில் சுற்றி வரும் விண்கலங்களைக் கண்காணிக்கவும், விண்வெளியில் உடைந்து மிதக்கும் விண்கல இடிபாடுகளை அகற்றவும் உதவும் என்று கருதப்பட்டது. தற்போது அது எதிரி நாட்டு விண்கலன்களை அழிப்பதற்காக அனுப்பப்பட்டதாக இருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. விண்கலன் போன்ற மர்ம இயந்திரத்துக்கு 201428 Ö என்று பெயரிடப்பட்டுள்ளது. (வ)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் பனிப் பொழிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். அதை அடுத்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க், நார்த் டகோடா, மினசோடா, விஸ்கான்சின், மிச்சிகன், ஒஹியோ மற்றும் பென்சில்வேனியா உட்பட பல பகுதிகளில் தற்போது பனி கடுமையாகப் பொழிகிறது. சில இடங்களில் இரவு நேர வெப்பநிலை மைனஸ் 11 டிகிரி செல்சியஸாக உள்ளது. ஒரு மணி நேரத்துக்கு 13 செ.மீ. அளவுக்குப் பனி பொழிகிறது. நியூயோர்க்கின் பவ்பலோ நகரில் 6 அடி உயரத்துக்குப் பனி படர்ந்துள்ளது. இதனால் மக்கள் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். (வ)

# மசூதியில் சோதனை சிக்கினர் 109 பேர்

## கென்யாவில் பொலிஸ் அதிரடி; குண்டுகளும் மீட்பு

கென்யாவின் மொம்பாசா நகரிலுள்ள 3 மசூதிகளில் பொலிஸார் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடத்தி வெடிகுண்டுகளைக் கைப்பற்றியதுடன் 109 பேரைக் கைதும் செய்துள்ளனர்.

துறைமுக நகரான மொம்பாசாவில் குறித்த இந்த மசூதிகளில் தீவிரவாதப் பயிற்சி அளிக்கப்பட்டதாக சந்தேகம் எழுந்ததை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அல்குவைதா இயக்கத்துடன் தொடர்புடைய அல்ஷபாப் போராளிக் குழுவில் சேர்வதற்கு குறித்த மசூதிகளில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெற்ற சோதனையில் 376 பேர் கைது



செய்யப்பட்டதுடன், ஜிஹாதிசம் குறித்த புத்தகம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனினும், சாட்சிகள் போதுமானதாக இல்லாததால் 91 பேர் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் அல் ஷபாப் பின் உறுப்பினர்கள் என்ற அடிப் படையில் 158 பேர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அரச தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

கென்யாவில் இஸ்லாமியப் போராளிக் குழுக்கள் தலைநகர் நைரோபியிலும் இந்து சமுத்திரக் கடற்கரையோரமாகவும் கடந்த காலத்தில் பலதாக்குதல்களைத் தொடுத்து வந்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மொம்பாசா பொலிஸ் கமாண்டர் ரோபெர்ட் கிட்டுர் தகவல் தருகையில் மிக நீண்ட காலமாக சேகரிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல்களின் படி முக்கியமாக மொம்பாசாவில் மத வழிபாட்டுக்கு உரிய தலங்களான பள்ளிகளில் தீவிரவாதப் பயிற்சி அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், இது தற்போது செயற்படும் தருணம் என்றும் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மொம்பாசாவின் மினா மசூதியில் மட்டும் 3 மிக நீண்ட கத்திகளும், ஸ்வஃபா மசூதியில் ஒரு கிரனேட்டு மற்றும் இரு 10 லீற்றர் பெற்றோல் குண்டுகள், டெட்டொனேட்டர் என பலவும் மீட்கப்பட்டுள்ளன. (வ)

## பலஸ்தீனம் தனிநாடாக ஸ்பெயின் ஆதரவு

பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கக் கோரி ஸ்பெயின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதில் ஸ்பெயின் அரசு பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

மேலும் இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் மூன்றாவது நாட்டின் தலையீடு தீர்வுக்கு உதவாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 319 பேர் வாக்களித்தனர். அதனை அடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாகப் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து நாடுகளிலும் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கக் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. (வ)

## வெள்ளை மாளிகைக்குள் நுழைய முயன்றவர் கைது

வொஷிங்டன், நவ.21

அமெரிக்காவில் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்கு வெளியே காரில் சுற்றித்திரிந்த மனிதனை பொலிஸார் நேற்று கைது செய்தனர். வெள்ளைமாளிகைக்கு அருகே உள்ள சோதனை சாவடியில் பொலிஸார் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது அயோவா நாட்டை சேர்ந்தஒருமனிதன்வெள்ளை மாளிகைக்குள் நுழைய முயன்றான். அப்போது பொலிஸார் அவனைத் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர் அவனது கையில் துப்பாக்கி இருந்தது. அவனது காரை சோதனை செய்த போது காரில் 40 சுற்று வெடி பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவனிடம் விசாரணை நடத்தியதில் அவனது பெயர் ஆர். ஜே ரெனாய் கபீம் (வயது 41) என்றும் 850 மைல் தொலைவில் உள்ள அயோவா நாட்டின் தலைநகர் டன்போர்ட்டை சேர்ந்தவன் என்பது தெரியவந்தது. (வ)

## எபோலாவால் 5,420 பேர் உயிரிழப்பு

### உலக சுகாதார அமைப்பு தகவல்

நியூயோர்க், நவ.21

எபோலா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 420 ஆக உயர்ந்துள்ளதாக, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல், கினியா, லைபீரியா, சியர்ரா லியோன் உள்ளிட்ட எட்டு நாடுகளில் 15 ஆயிரத்து 145 பேர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டனர் என்று உலகசுகாதார அமைப்பு கூறியுள்ளது. (வ)

## இந்தோனேஷியாவில் பொலிஸில் இணையும் பெண்களுக்கு அவலம்

### கன்னித்தன்மை பரிசோதனையால்

ஜகார்த்தா, நவ.21

இந்தோனேஷியா நாட்டில் பொலிஸ் படையில் சேரும் பெண்களுக்குக் கன்னித்தன்மை பரிசோதனை நடப்பது பெரும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.



உலகில் அதிகளவில் இஸ்லாமியர்களைக் கொண்ட இந்தோனேஷியாவில் பொலிஸ் வேலையில்பெண்கள் இணைவது பெரும் கஷ்டமாக உள்ளது. அங்கு பொலிஸ் படையில் சேர விரும்பும் பெண்களுக்கு கன்னித்தன்மை சோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து மனித உரிமை அமைப்பொன்றைச் சேர்ந்த பெண் ஒருவர் கூறுகையில், சமீபத்தில் இந்தச் சோதனைக்குப் பல பெண்கள் உட்படுத்தப்பட்டதாகவும், கன்னிப்பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு அவர்களுக்கு பெண் மருத்துவர்களால் இரு விரல் சோதனை நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்தச் சோதனை மிகவும் அபாயகரமானது என்றும் இது அவமானமான செயல் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாக விமர்சித்துள்ளது. (வ)

# ஆயுதக் கட்டுப்பாட்டை தளர்த்துகிறது இஸ்ரேல்

ஜெருசலேம், நவ.21

ஜெருசலேமில் உள்ளயூத வழிபாட்டுத் தலத்தில் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தவிருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலின் மக்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யிட்ஸாக் அஹ்ரா ரோனோவிட்ச் கூறுகையில், "விரைவில், ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்" என்று தெரிவித்தார்.

எனினும், பொதுமக்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா அல்லது, பாதுகாப்புப் படையினருக்கான ஆயுத விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்படுமா என்பது குறித்து அவர் விவரிக்கவில்லை.

ஜெருசலேமிலுள்ள யூதர்களின் வழிபாட்டுத் தலத்துக்குள் செவ்வாய்க்கிழமை நுழைந்த இரு பலஸ்தீனர்கள், அங்கே வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கி, கத்தி ஆகிய ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதில் 4 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட அந்த இருவரையும், பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.



யூதர்களின் வழிபாட்டுத் தலத்தில், பாலஸ்தீனர்களால் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட இத்தகைய மனித வெடிகுண்டுத் தாக்குதல், இஸ்ரேலை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதன் தொடர்ச்சியாகவே மக்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யிட்ஸாக் அஹ்ரா ரோனோவிட்ச், ஆயுதக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாக அறிவித்துள்ளார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வீண் பிரச்சினைகள் நீங்கும். மரியாதை அந்தஸ்து உயரும். வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். தொழில் வியாபாரச் சிக்கல்கள் நீங்கும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய முயற்சி மேற்கொள் வீர்கள்.

**இடபம்**: உறவினர், நண்பர்கள் உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**: திறமையான பேச்சின் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். காரியத் தடைகள் நீங்கும். தாமதமான போக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகும்.

**கடகம்**: பயணங்களால் வீண் செலவு உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாகப் பணிகளை மேற்கொள்வது நல்லது. மேலதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.

**சிங்கம்**: குடும்பத்தில் அமைதி குறையலாம். நிதானமாகப் பேசி பழகுவது நல்லது. பிள்ளைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பது அவசியம். வியா பாரிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும்.

**கன்னி**: எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வீண் அலைச்சல், தடை, தாமதம் ஏற்படலாம். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**துலாம்**: பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனம் தேவை. நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் வரும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கப்பெறுவீர்கள். அவர்களது கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**தனுசு**: புத்திசாதுரியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரலாம். பிரச்சினைகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் போட்டியைச் சந்திக்கவேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**: மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். எதிலும் திருப்தி இல்லாத நிலை காணப்படும். குடும்பத்தில் கலகலப்புக் குறையும். எதிலும் வெறுப்பும் திடீர்க் கோபமும் வரலாம். உடலைப் பற்றி தவறான எண் ணங்கள் தோன்றி மறையும்.

**கும்பம்**: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எந்த முயற்சியிலும் சாதகமான பலன் கிடைப்பதில் தாமதமாகும். மனக்கவலை ஏற்படலாம். பிரயாணத்தில் தடங்கல் ஏற்படலாம். திட்டமிட்டபடி காரியங்கள் நடந்து முடியாமல் இழுபறியாக இருக்கும்.

**மீனம்**: வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். எந்தக் காரியத்தையும் கடின பிரயாசைக்கு பிறகே செய்ய வேண்டி இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும்.

## நாளை

**கார்த்திகை-06 சனிக்கிழமை | 22.11.2014**

திதி: அமாவாசை
மு.இ.6.27 வரை
நட்சத்திரம்: விசாகம்
பி.ப.02.01 வரை

சுபநேரம்:3.10 - 04.40 வரை
இராகுகாலம்:09.10 - 10.40 வரை
**அமாவாசை விரதம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## செய்ய வேண்டிய கடமைகள்

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் எப்பொழுதும் அவசரப்படக்கூடாது. நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக முறைதவறி எல்லா இடங்களிலும் செல்லக் கூடாது. நண்பராக்கிக் கொள்ள விரும்புபவர்களின் செயல்களையும், அவர்கள் பிறருடன் பழகும் விதத்தையும் கவனிக்க வேண்டும். அதை ஆராய வேண்டும். அதன் பிறகே நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும். மூன்று விடயங்களை அவன் பேசக் கூடாது. தன் புகழைப் பொது இடத்தில் பேசக்கூடாது. தன் பெயரையோ, திறமையையோ தானே பரப்பக் கூடாது. செல்வத்தைப் பற்றியோ, தன்னிடம் தனிமையில் பிறர் சொன்ன இரகசியங்களையோ வெளியே சொல்லக்கூடாது. தான் ஏழை என்றோ பணக்காரன் என்றோ எதுவும் பேசுவது நல்லதல்ல. ஒருவர் தனது செல்வத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளக் கூடாது. இந்த விடயங்களைத் தன்னோடு வைத்துக்கொள்ளவேண்டும். இது உலக வழக்கு மட்டுமல்ல. அவனது கடமையும் ஆகும். இவற்றையெல்லாம் அவன் கடைப்பிடிக்கவில்லை என்றால் அவன் நன்னெறியில் செல்லாதவன் என்று கருதப்படவேண்டும். இல்லறத்தான் சமுதாயம் முழுவதன் ஆதாரமாகவும் தாங்கும் தூணாகவும்இருக்கிறான். சமுதாயத்தில் முக்கியமாகச் சம்பாதிப்பவன் அவனே. ஏழைகள், பலவீனர்கள், குழந்தைகள்,வேலைசெய்யாத பெண்கள் ஆகிய எல்லோருமே இல்லத் தலைவனைச் சார்ந்தே வாழ்கிறார்கள். எனவே அவன் செய்தேயாக வேண்டிய கடமைகள் ஏராளம் உள்ளன. இந்தக் கடமைகள் அவற்றைத் திறம்படச் செய்கின்ற வலிமையை அவனுக்குத்தருபவையாக அமைய வேண்டும். தனது இலட்சியத்திற்குப் பொருந்தாத, கீழான செயல்களைச் செய்கிறோம் என்ற உணர்வை அவ்னுக்குத் தருபவையாக எந்தச்செயலும்அமையக்கூடாது.

# 4 கைகள், கால்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை



இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத் தில் உள்ள பருய்பூர் கிராமத்தில் நான்கு கைகள் மற்றும் கால்களுடன் அதிசயமான குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

இது குறித்து கேள்விப்பட்ட அந்தப்பகுதி மக்கள் அது கடவுளின் குழந்தை என்று கூறி, குழந்தையைப் பார்க்க திரளாக வந்த வண்ணம் உள்ளனர். குழந்தையைப் பார்க்க மருத்துவ மனைக்கு வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் திணறி வருகின்றனர். கடவுளின் அவதாரத்தில் தான் பலகைகளும், கால்களும் இருக்கும் என்று நம்பப்படுவதால், அந்தக் குழந்தையும் கடவுளின் குழந்தை என்று அந்தப் பகுதி மக்களால் கருதப்படுகிறது. பருய்பூர் கிராமத்துக்கு அருகிலுள்ள கிராமத்தில் வசிக்கும் 67 வயதான சுக்கா ராவ் இது குறித்து கூறுகையில்,

குழந்தைக்கு நான்கு கைகள் மற்றும் கால்கள் இருப்பதாகச் செய்தி வந்தவுடன் முதலில் நாங்கள் சந்தேகப்பட்டோம். ஆனால் குழந்தையை நேரில் பார்த்தபோது அதைக் கண்டு வியப்படைந்தோம் என்று கூறினார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | 6 | | | | | 7 |
| | | 2 | 5 | 1 | 7 | 4 | | |
| | | | | 4 | | 2 | | |
| | 6 | 8 | 7 | 5 | | 1 | | 4 |
| | 9 | | | 2 | | | 6 | |
| 1 | | 7 | | 8 | 6 | 3 | 5 | |
| | | 9 | | | | | | |
| | | 3 | 4 | 6 | 5 | 8 | | |
| 4 | | | | | 8 | | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 3 | 9 | 4 | 8 | 5 | 7 | 1 |
| 5 | 4 | 7 | 1 | 2 | 3 | 8 | 9 | 6 |
| 1 | 8 | 9 | 7 | 6 | 5 | 3 | 4 | 2 |
| 8 | 3 | 6 | 5 | 7 | 1 | 4 | 2 | 9 |
| 4 | 1 | 5 | 3 | 9 | 2 | 6 | 8 | 7 |
| 7 | 9 | 2 | 6 | 8 | 4 | 1 | 5 | 3 |
| 9 | 2 | 1 | 8 | 5 | 6 | 7 | 3 | 4 |
| 6 | 5 | 4 | 2 | 3 | 7 | 9 | 1 | 8 |
| 3 | 7 | 8 | 4 | 1 | 9 | 2 | 6 | 5 |

# அரையிறுதி ஆட்டங்கள் வலிகாமம் லீக்கில் இன்று



வலி.வடக்கு, நவ. 21

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் 'ஏ' அணிகளுக்கு இடையே நடைபெறும் ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அரையிறுதி ஆட்டங்களில் விளையாட தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும், பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும், இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன.

நேற்று வியாழக்கிழமை பி.ப3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் அராலி அண்ணா அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் அணி மோதியது. 5ஆவது நிமிடத்தில் கல்வளை விநாயகர் வீரன் அரவிந்தன் முதல் கோல் அடித்தார். அராலி அண்ணா அணியினர் தமக்குக் கிடைத்த கோல்கள் பெறும் வாய்ப்பை நழுவ விட்டனர்.

இடைவேளையின் பின்னரும் மேலதிக கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இதனால் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் முடியும் வரை இரண்டு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காது மோதினர். எனினும் முடிவு நேரம் வரை இரு அணியினராலும் எந்தவித கோல்களையும் அடிக்க முடியவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் இளவாலை யங்ஹென்றிஸ் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. யூனியன்ஸ் 4 : 0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை வென்றது.

மற்றுமொரு போட்டியில் குப்பிளான் குறுஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதின.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாகக் காணப்பட்ட போதிலும் ஆட்ட நிறைவில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் குப்பிளான்குறிஞ்சிக் குமரன்விளையாட்டுக்கழகத்தை வென்றது.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் பிறைற்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(உ-86. 23)

# பொலிஸ் அணிகள் ஆட்டம் சமநிலை



யாழ்ப்பாணம், நவ. 21

பொலிஸ் திணைக்களம் நடத்தும் 79ஆவது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று வியாழக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணியை எதிர்த்துப். பொலன்னறுவை மாவட்ட பொலிஸ் அணி மோதியது. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

பொலன்னறுவை பொலிஸ் அணியின் முன்கள வீரன் தனது அணிக்கான முதலாவது கோலை அடிக்க ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு மன்னார் பொலிஸ் அணியினர் தமது அணிக்கான கோலைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பை முற்றுகையிட்டனர். ஆனால் அவர்களால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்திய போது பொலன்னறுவை மாவட்ட பொலிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்தின் ஆரம்பத்தில் மன்னார் மாவட்ட பொலிஸ் அணி வீரன் ஜெகன் தனக்குக் கிடைத்த பந்தை சரியான முறையில் கோல்லாக மாற்றி பொலன்னறுவை மாவட்ட பொலிஸ் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். கடைசிவரையில் இரண்டு அணியினரும் தமது அணிக்கான மேலதிக கோல் எதனையும் பெறவில்லை. (உ-23)

# யாழ். வருகிறார் ஷெப் பிளாட்டர்



## அரியாலையில் மைதானத்தை திறந்து வைக்க

யாழ்ப்பாணம், நவ. 21

சர்வதேச உதைபந்தாட்ட சங்கங்கள் சம்மேளனத் (பிபா) தலைவர் ஷெப் பிளாட்டர், அடுத்த மாதம் முதலாம் திகதி கொழும்புக்கு வருகை தரவுள்ளார். டிசெம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் அரியாலையில் உதைபந்தாட்ட மைதானத்தைத் திறந்து வைக்கிறார். அவர் கொழும்புக்கு வருகை தரும் மூன்றாவது பயணம் இதுவாகும்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தற்போதைய உதைபந்தாட்ட இல்லத்தைத் திறந்து வைக்கவென 2002 இல் இங்கு வருகை தந்த பிளாட்டர், 2007இல் சுனாமி நிதியத் திட்டங்களையும் பார்வையிட வருகை தந்திருந்தார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின்75ஆவதுவருடபூர்த்தி விழா கொண்டாட்டங்களில் கலந்து சிறப்பிக்கும் வகையில் அவர் வருகை தருகின்றார்.

தனது 36 மணித்தியால இலங்கை பயணத்தின்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ள ஷெப் பிளாட்டர், யாழ்ப்பாணம், அரியாலையில் அமைக்கப்பட்டுவரும் உதைபந்தாட்ட விளையாட்டுத் தொகுதியை டிசெம்பர் 2ஆம் திகதி காலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

அன்றைய தினம் மாலை கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 75 ஆவது வருடபூர்த்தி விழாவில் கலந்து கொண்டு, இலங்கையின் உதைபந்தாட்ட விற்பன்னர்கள் மூவருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

அத்துடன் அன்றைய தினம் இலங்கை உதைபந்தாட்ட அணி வீரர்களுக்கான சீருடையும் அறிமுகப்படுத்தப்படும். இந்த வைபவம் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் ரஞ்சித் ரொட்றிக்கோ தலைமையில் நடைபெறும். (த)

# படைகளின் விளையாட்டில் வெளிக் கழகம் வெற்றி



இலங்கை இராணுவத்தினருடைய வடமாகாண, விளையாட்டு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இதில் கழகங்கள் மற்றும் இலங்கை கடற்படையினர், இலங்கை வான் படையினருக்கான அழைப்பு போட்டிகளும் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கழகங்களுடன் இலங்கை கடற்படையினர். வான் படையினருக்கான 4×200 அஞ்சல் ஓட்டப் போட்டிகளும் இடம்பெற்றன. இந்தப் போட்டியில் இலங்கை கடற்படையினரையும் இலங்கை விமானப் படையினரையும் பின்தள்ளி அசுர வேகத்தில் ஓடி யாழ்ப்பாணம் ஓட்டுமடம் காலைவாணி விளையாட்டுக் கழக அணியினர் முதலாவது இடத்தைப் பெற்றனர். அவர்களுடன் போட்டியிட்டு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை வான் படையினர், கடற்படையினர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கலைவாணி அணியினருக்கு 8 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(உ-21)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், நவ. 21

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் வெற்றிக் கிண்ண 2ஆம் சுற்று ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (உ-23)

# கிளிநொச்சி லீக் ஆட்டங்கள் நாளை



கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆளுநர் வெற்றிக் கிண்ண போட்டி நாளை சனிக்கிழமை பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. 8 விளையாட்டுக்கழக அணிகள் பங்குபற்றுகின்றன. என போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (உ-23)

# இன்று மைலோ கிண்ண 2ஆம் சுற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 21

மைலோ கிண்ண இரண்டாம் சுற்று இன்று ஆரம்பமாகின்றது. துரையப்பா விளையாட்டரங்கில் காலை 8 மணி முதல் ஆட்டங்கள் இடம்பெறும். யாழ். மாவட்டத்தில் உள்ள 4 லீக்குகளிலும் விலகல் முறையில் இடம்பெற்ற ஆட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரு அணிகள் வீதம் 8 அணிகள் இந்த லீக் சுற்றில் மோதவுள்ளன. மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி, வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி, குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி, நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி, நவாலி சென்.பீற்றேஸ் விளையாட்டுக்கழக அணி, தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி, நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி, கலைமதி விளையாட்டுக்கழக அணி ஆகிய 8 அணிகள் பற்குபற்றுகின்றன. (உ-23)



# முதலிடத்துக்கு முன்னேறியது சென்னை

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் சென்னையின் எப்.சி. 3-1 என்ற கோல் கணக்கில் புனே சிற்றி எப்.சி. அணியைத் தோற்கடித்தது. இதன்மூலம் 16 புள்ளிகளைப் பெற்ற சென்னை அணி அதிக கோலடித்ததன் அடிப்படையில் ம்முதலிடத்தைப் பிடித்தது.

உள்ளூர் ரசிகர்களின் பெரும் ஆதரவோடு ஆரம்பம் முதலே அசத்தலாக ஆடிய சென்னை அணிக்கு 3ஆவது நிமிடத்தில் கோல் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் கோல் கம்பத்தின் அருகு வரை பந்தை எடுத்துச் சென்ற சென்னை வீரர் மென்டோஸா, கோல் கம்பத்துக்கு மேலே தூக்கியடித்து ஏமாற்றினார்.

வழக்கம்போல் இந்த முறையும் அசத்தலாக ஆடி சென்னை ரசிகர்களை குஷிப்படுத்திய இலானோர், கால் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக 16 ஆவது நிமிடத்தில் வெளியேறியது சென்னை அணிக்குப் பின்னடைவானது. அவருடைய ஆட்டத்தைக் காண வந்த ரசிகர்களுக்கும் ஏமாற்றமாக அமைந்தது. இதன் பிறகு இலானோ இல்லாத் குறையை தீர்க்க மென்டோஸா கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. 35 ஆவது நிமிடத்தில் மென்டி கொடுத்த பாஸை கர்மான்ஜோத் கப்ரா வீணடிக்க, முதல் பாதி ஆட்டம் கோலின்றி முடிந்தது.

பின்னர் நடைபெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்தில் கோலடிக்க தீவிரம் காட்டியது சென்னை. 62 ஆவது நிமிடத்தில் மாற்று ஆட்டக்காரரான பல்வந்த் சிங்கிடம் பந்து செல்ல, அவர் மென்டோஸாவுக்குப் பாஸ் செய்தார். அப்போது புனே கோல் காப்பாளர் முன்னோக்கி வர, அவருக்கு மேலாக பந்தை தூக்கியடித்து அசத்தலாக கோலடித்தார் மென்டோஸா. அப்போது மகிழ்ச்சிப் பெருக்கில் மைதானத்துக்கு உள்ளே வந்த ரசிகர்களை நடுவர் வெளியே செல்லுமாறு தெரிவித்தபோது அவரையும் கட்டிப்பிடித்து கொண்டாடினார் அணித் தலைவர் போயன் ஜோர்டிச்.

இதன்பிறகு சென்னை வீரர் ஜெம்பா 70 ஆவது நிமிடத்தில் ஓன்' கோலடிக்க, இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையை எட்டின.

ஆனால் அடுத்த சில நொடிகளிலேயே புனேக்கு பதிலடி கொடுத்தார் புருனோ. அசத்தலாக அவர் அடித்த கோலால் சென்னை மீண்டும் முன்னிலை பெற்றது. தொடர்ந்து வேகம் காட்டிய சென்னை அணி மேலதிக நேரத்தில் 3ஆவது கோலை அடித்தது.

இந்த கோலை ஜேஜே லால்பெக்குலா அடித்தார். இதன் மூலம் சென்னை அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது. முந்தைய 4 ஆட்டங்களில் தொடர்ச்சியாக சமநிலை செய்த சென்னை, இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் 16 புள்ளிகளுடன் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. (த)

# அந்த அழகி யார்?

ஐ.பி.எல் சூதாட்டம் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி முத்கல் குழு விசாரணை நடத்தி உச்ச நீதிமன்றத்தில் அறிக்கையைத் தாக்கல் செய்தது.

இதில் இலங்கையில் கடந்த 2010 ஆம் ஆண்டு நடந்த ஆசியக் கிண்ணப் போட்டியின் போது இந்திய வீரருடன் தங்கியிருந்த அழகி யார் எனக் கேள்வியெழுப்பியுள்ளது.

இந்தப் போட்டியின்போது இந்திய அணியின் முன்னணி வீரர் ஒருவரின் ஹோட்டல் அறையில் அழகி ஒருவர் அதிகாலை 4 மணி வரை தங்கி இருந்த தகவல் ஏற்கனவே வெளியாகி இருந்தது.

பின்னர் இந்த அழகி கம்பனி ஒன்றின் நிர்வாகி என்பது தெரியவந்தது. அந்த அழகி அன்று இரவே தம்புள்ளவில் இருந்து கொழும்பு செல்ல இருந்தார். வீரர்களின் வற்புறுத்தலின்பேரில் அவர் ஹோட்டல் அறையில் தங்கி இருந்ததாகவும், சூதாட்ட விசாரணை அறிக்கையில் இடம் பெற்றுள்ள ஒரு வீரரின் அறையில்தான் அந்த அழகி தங்கி இருந்தார் என்றும் கூறப்படுகிறது

தற்போது இந்த விசாரணை குழு இலங்கையில் உள்ள ஹோட்டல் அறையில் இந்திய வீரருடன் தங்கி இருந்த அழகியிடம் விசாரணை செய்ததாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

அதேபோல் இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்த அழகி தற்போதைய இந்திய அணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு வீரரைத் திருமணம் செய்ய இருக்கிறார் என்றும், இந்தத் திருமணம் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு பிறகு நடைபெறும் எனவும் கூறப்படுகிறது. (த)

# கோஹ்லியின் 3 டி



விராட் கோஹ்லியின் சாதனைகளை கொண்டாடும் வகையில் அவரின் 3 டி அனிமேஷன் படம், இணையத்தளம் மற்றும் லோகோ, ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

சமீபத்தில் முடிந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் 5-0 என்ற கணக்கில் தொடரை வென்று இந்தியா சாதனை படைத்தது.

அதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி ஐ.சி.சி. ஒருநாள் தர வரிசையில் 2ஆவது இடத்திற்கு முன்னேறினார். இந்நிலையில் இலங்கை தொடரில் அணித் தலைவராகச் செயல்பட்டுச் சாதனை புரிந்த கோஹ்லியின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் சுப்பர் ஹீரோ கரக்டரை வைத்து அவரது அனிமேஷன் படங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இந்த 3டி அனிமேஷன் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட விராட் கோஹ்லி கூறுகையில், எனது சுப்பர் ஹீரோ அவதாரம் ஸ்பைடர்மான் மற்றும் சுப்பர்மான் போல எதிரிகளுடன் சண்டையிடும். நான் இதை செய்ய முடியுமா என்று எனக்கு தெரியவில்லை. 3டி அனிமேஷன் தொடர்கள் மிகவும் ஆச்சரியமானவை. எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் குழந்தைகளை நிச்சயம் ஈர்க்கும். எனது 3டி அவதாரம் விரைவில் பிரபலமாகும் என நினைக்கிறேன் என்று கூறியுள்ளார். (த)

# சிக்கலில் 3 கிரிக்கெட் சங்கங்கள்

ஐ.சி.சி தலைவர் என். சீனிவாசனுக்கு ஆதரவாக முத்கல் குழு தெரிவித்த கருத்தால், மும்பை, விதர்பா, பஞ்சாப் கிரிக்கெட் சங்கங்களுக்கு சிக்கல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த மூன்று அமைப்புகளுக்கும் இந்திய கிரிக்கெட் சபை அபராதம் விதிக்கும் என்று தகவல் வெளியா கியுள்ளது.

முத்கல் குழு, ஐ.சி.சி தலைவர் என். சீனிவாசனுக்கு சூதாட்டம் மற்றும் ஆட்ட நிர்ணயத்தில் தொடர்பு இல்லை என்று உச்ச நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து மும்பை, விதர்பா, பஞ்சாப் கிரிக்கெட் சங்கங்கள் மீது இந்திய கிரிக்கெட் சபையின் பார்வை திரும்பியுள்ளது.

பிஹார் கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த ஆதித்ய வர்மா சீனிவாசனுக்கு எதிராக வழக்கு தொடுத்தார். மும்பை, விதர்பா, பஞ்சாப் கிரிக்கெட் சங்கங்களைச் சேர்ந்த முன்னாள் மற்றும் தற்போதைய தலைமை நிர்வாகிகள், அந்த வழக்குக்கு ஆதரவான நிலை எடுத்ததாகத் தெரிகிறது.

இதனால் சீனிவாசன் வழக்கு தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்ட செலவுகளை ஈடுகட்ட இந்த 3 அமைப்புகளுக்கும் அபராதம் விதிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. (த)



# விலக வேண்டும் கிளார்க்

உலகக் கிண்ணத்துக்கு பிறகு ஒருநாள் ஆட்டங்களில் இருந்து மைக்கல் கிளார்க் விலக வேண்டும் என முன்னாள் அணித் தலைவர் அலன் போர்டர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் தொடங்கவுள்ளன. இதற்காக அனைத்து அணிகளும் தயாராகி வருகின் றன. இந்நிலையில் அடிக்கடி காயத்தால் அவதிப் பட்டு வரும் ஆஸ்திரேலிய அணித் தலை வர் மைக்கல் கிளார்க், 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறவேண்டும் என்று ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் அலன் போர்டர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட காலம் நீடிக்கவேண் டும் என்று கிளார்க் விரும்பினால் அவர் ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு முழுக்குப் போட வேண்டும். உலகக் கிண்ணத்தில் என்ன நடந்தாலும், அடுத்த சில ஆண்டுகளுக்கு டெஸ்ட் வீரராக இருப்பதில் மட்டுமே அவர் கவனம் செலுத்தவேண்டும்.

அவரது உடல் ஒத்துழைக்கும் பட்சத்தில், டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்துள்ள ஆஸ்திரேலிய வீரர்களின் பட்டியலில் கிளார்க்கால் முதலிடத்துக்கு முன்னேற முடியும் என்று கூறியுள்ளார். (த)

## தப்பு பண்ணிட்டேன்



இந்திய அணியின் வீரர் விராட் கோஹ்லி டுவிட்டரில் போட்ட ஒரு டிவிட்டால் டுவிட்டர் வலைத்தளமே பரபரப்பாகி விட்டது.

இளம் வயதில் பல சாதனைகளைப் படைத்து ரசிகர்களை அதிக அளவில் கொண்ட விராட் கோஹ்லி எது செய்தாலும் உடனே பரப்பாகி விடும்.

இப்படித்தான் நேற்று வியாழக்கிழமை காலையில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் போட்ட ஒரு டிவிட்டுக்கு ஏகப்பட்ட பதில்கள், விளக்கங்கள், கவலைகள் வந்து குவிந்து விட்டன.

இரண்டு டுவிட்டுகள்தான் கோஹ்லி போட்டிருந்தார். அதுதான் பரபரப்பைக் கிளப்பி விட்டு விட்டது. நான் என்ன பண்ணிட்டேன் என்பது முதல் டுவிட். உடனே பலரும் என்னாச்சு கோஹ்லி, என்ன பண்ணிட்டீங்க என்று கேட்டுத் துளைத்தெடுக்க ஆரம்பித்து விட்டனர். அடுத்து ஏதோ தப்பாகச் செய்து விட்டேன் என்று நினைக்கிறேன் என்று இன்னொரு டுவிட்டைப் போட்டார் கோஹ்லி. இதுவும் காட்டுத்தீ போல கருத்துக்களைக் கவர்ந்து விட்டது. ஒருவர், கோஹ்லி போட்டிருந்த டுவிட்டைக் குறிப்பிட்டு, ஆமாம், றோங் என்ற வார்த்தையைத் தப்பாகத்தான் போட்டு விட்டீர்கள் என்று நக்கலடித்துள்ளார்.

இப்படித் தான் இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பு போகும் பயங்கரமாக கோஹ்லி பேசினார். ஆனால் அங்கு போய் சொதீப்பி தள்ளினார்.

இந்திய கிரிக்கெட் அணி இன்று இரவு அல்லது நாளை சனிக்கிழமை காலை ஆஸ்திரேலியா கிளம்பவுள்ளது. இந்த நேரம் பார்த்து இப்படி டுவிட்டைப் போட்டு குட்டையைக் குழப்பியிருக்கிறார் கோஹ்லி. இங்கிலாந்து தொடரைப் போல ஆஸ்திரேலிய தொடரில் சொதப்பாமல் இருந்தால் சரி என ரசிகர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர். (த)

# சமநிலையை நோக்கி போட்டி



பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது டுபாயில் இடம்பெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்துஅணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அபாரமாக ஆடிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான லாதம் சதமடிக்க அவ் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டையும் இழந்து 403 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து சார்பாக அதிக பட்சமாக லாதம் 137, மக்கலம் 43, கிரேக் 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக பாபர் 4 விக்கெட்டுக்களையும் அடில், சாஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் றகற் அலி, அஸ்கர் அலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான மசூட் 13 ஓட்டத்துடனும் உமார் 16 ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் கொடுத்தாலும் தொடர்ந்து வந்த அலி மற்றும் யுனிஸ்கான் தமக்குள் இணைப்பாட்டமாக 113 ஓட்டங்களைப் பகிர பாகிஸ்தான் அணி மீண்டும் வலுவான நிலைக்குச் சென்றது. தொடர்ந்து வந்த அகமட் சதத்தை நிறைவுசெய்து அசத்த அவ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 393 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பாக அதிகபட்சமாக அகமட் 112, அலி 75, யுனிஸ்கான் 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்து சார்பாக பந்துவீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும், சொட்ஹி மற்றும் பௌல்ற் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் கிறைக், நீஸம், மக்கலம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

10 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணியின் ஆரம்ப விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டாலும் ஒரு நாள் பாணியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரெய்லரின் அதிரடியால் நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 6 விக்கெட் இழப்பிற்கு 167 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரெய்லர் 77 ஓட்டத்துடனும் கிரேக் எந்தவித ஓட்டத்தையும் பெறாது ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக பாபர், சாஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். (த-ரி)

## தொடர்ச்சிகள்...

### பொது வேட்பாளர்

ஜனாதிபதித் தேர்தலில் கடந்த தடவையைப் போன்று எதிரணிகளின் சார்பில் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான பேச்சுக்கள் கடந்த சில மாதங்களாகவே இடம்பெற்று வந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க. தலைமைத்துவச் சபையின் தவிசாளர் கரு ஜெயசூரியா ஆகியோரது பெயர்களே இதுவரையில் பொதுவேட்பாளராக பிரேரிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் கடந்த சில தினங்களாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுள் ஒருவருமான மைத்திரிபால சிறிசேனாவை எதிர்க்கட்சிகள் பக்கம் இழுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா இதில் முன்னணிவகித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார் என்று இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொது எதிரணிகள் இணைந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு உள்ளிட்ட 6 கோரிக்கைகள் அடங்கிய பொது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன.

கட்சித்தாவலை மறுக்கவில்லை

இதேவேளை - இந்தப் பரபரப்புக்குள் மத்தியில், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம்பெற்றது. ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம், மைத்திரிபால சிறிசேனவின் கட்சித் தாவல் தொடர்பில் கேள்வியெழுப் பப்பட்டது.

கேள்வி : அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா அரசிலிருந்து வெளியேறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதே ?

பதில் : தேர்தல் காலங்களில் இவ்வாறான கட்டுக் கதைகள், வதந்திகள் பரவுவது வழமை. இவற்றுள் சில விடயங்கள் உண்மையாகக்கூட அமையலாம் (சிரிக்கிறார்).

கேள்வி : எதிரணியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனா களமிறங்குவாரா?

பதில் : அவர் அரசியலில் தானே இருக்கிறார்

கேள்வி : அமைச்சர் மைத்திரிபால எதிரணியின் பொது வேட்பாளராக போட்டியிடுவார் என்ற செய்திகள் தொடர்பில் மறுக்கவில்லையே ஏன் ?

பதில் : ஏன் சும்மா நேரத்தை வீணடிக்க வேண்டும் என்று நினைத்திருப்பார்.

கேள்வி : சரி, மறுப்பதற்கு எவ்வளவு நேரம்தான் எடுக்கப் போகின்றது ?

பதில் : (சத்தமாக சிரிக்கின்றார்) அவ்வாறானதொரு எண்ணம் இருந்தால் தானே அவர் மறுப்பு தெரிவிக்க வேண்டும்.

சு.கவின் மத்திய செயற் குழு கூட்டத்துக்கு கூட அவர் வந்திருந்தார். தேர்தல் பரப்புரைப் பொறுப்பும் அவருக்குத் தானே வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி : அவர் கட்சிதாவுவதை தடுப்பதற்காக, பிரதமர் பதவியை அவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டதாகத் தெரிவிக்கப்படுகின்றதே ?

பதில் : (சிரிக்கின்றார்) பதில் வழங்கவில்லை.

(ந-5)

### மனுத்தாக்கல்

பத்திரம் தொலைநகல் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது என்று தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், வேட்புமனுத் திகதி தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் முடிவில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளரை உத்தியோகபூர்வமாக நேற்றுக் கோரியிருந்தார். இது தொடர்பிலான வர்த்தமானிப் பத்திரத்தில் அவர் கையொப்பமிட்டிருந்தார்.

இது தொடர்பிலான வர்த்தமானிப் பத்திரம் நேற்று மதியமே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அது கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்திய தேர்தல்கள் ஆணையாளர், ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி மற்றும் வேட்புமனு ஏற்றுக் கொள்வதற்கான திகதி தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ந-5)

### ஸ்ரீ.சு.க.

யின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு அவசர அவசரமாக அமைச்சரவைக் கூட்டம் கூடப்பட்டது. அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இரவு 10.30 மணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கூடப்பட்டுள்ளது. அதில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, ஆறு ஆண்டுகள் பதவி முடிந்த பின்னர் தேர்தலை நடத்துமாறு கோரியுள்ளார். இருப்பினும் ஜனாதிபதி அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவது தொடர்பிலும் காரசாரமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா முன்மொழிந்துள்ளார். அதனை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி மற்றும் அமைச்சர் சி.பி.ரத்நாயக்கா ஆகியோர் வழிமொழிந்துள்ளனர்.

(ந-5)

### மாவீரர் வாரம்

கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் இரகசியமான முறையிலேயே தாயகத்தில் மாவீரர் வாரம் மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஆயினும் தமிழர்கள் பரந்து வாழும் தேசம் முழுவதும் மாவீரர் வாரம் தொடர்ந்தும் எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டும் நவம்பர் 27 ஆம் திகதி பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, சுவிஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

### புலிகள்

கல்கிசை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பொறுப்பதிகாரியான பி.ஜெயரட்ணம் உள்ளிட்ட 80 படையினர் மற்றும் பொலிஸார், ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் வைத்து, விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டனர். அதன் பின்னர் அவர்களின் சடலங்கள் பழைய ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன என்று, விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தகவல் வெளியிட்டிருந்தனர் என்றும், இந்த தகவல்களின் அடிப் படையிலேயே, அந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதியைக் கண்டு பிடிப்பதற்கான தேடுதலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்றும் கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஜெயரட்ணம் கொழும்பில் விடுதியொன்றில் வைத்து கடந்த 2004 ஆம் ஆண்டு கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அவர் கடல் வழியாக விடுதலைப் புலிகளால் வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டு, விசாரணைகளின் பின்னர் கொல்லப்பட்டார் என்று படையினர் முன்னர் தெரிவித்தனர்.

(ந-5,55)

### கஞ்சா

சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியரை யாழ்.மேல்நீதிமன்று கடும் நிபந்தனையில் நேற்றுப் பிணையில் விடுவித்ததுடன், இலங்கையிலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளின் உறுதிப்படுத்தல் ஆவணத்துடன் அவர் செல்ல முடியும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் இரத்தினம்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)



பொன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் இரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) நேற்று (20.11.2014) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வேலாயுதர் நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், திரு.திருமதி பொன்னையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- நகுலாம்பிகை தம்பதியரின் மருமகனும், வேதவல்லியின் அன்புக் கணவரும் தாட்சாயனி (மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), உமணகேனன் (யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர்), மந்தாகினி (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 4ஆம் வருட மாணவி), வைஸ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி), சதுர்புஜன் (சுழிபுரம் விக்றோறியா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரஞ்சனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கோவிந்தபிள்ளை மற்றும் ஆச்சிபிள்ளை, கெங்காமணி ஆகியோரின் சகோதரனும், ஞானானந்தன், சதானந்தன், விவேகானந்தன், கருணானந்தன், அருளானந்தன், கலாவல்லி, ஆனந்தவல்லி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்ள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை, சுழிபுரம்.
077 2188 987

(C/17764)(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி செல்வி ஆன்சங்கவி நற்குணம் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டதற்கிணங்க சித்தியடைந்துள்ளார் என்பதனை மகிழ்வோடு அறியத்தந்து அவரைப்பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரைக் கற்பித்த ஆசிரியை திருமதி அபிராமி உதயபாபு அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: (54435)(4.3.6)
கல்லூரிச்சமுகம், பெற்றோர், உறவினர்கள்

# காவலாளிக்கு எதிர்ப்பு ஊர்மக்கள் ஆர்ப்பாட்டம்

## மட்டு. கல்வி வலயப் பாடசாலையில்



மட்டக்களப்பு, நவ.21
மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயத்துக்கு நியமிக்கப்பட்ட காவலாளியை பாடசாலையினுள் உள்நுழைய விடாது தடுத்து புதன்கிழமை அந்தக் கிராமவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணசபையால் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்ட நியமனத்தின்படி, ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயத்துக்கு நியமனம் வழங்கப்பட்டது. இவ்வாறு நியமனம் வழங்கியதைக் கண்டித்தும் தங்களது பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைக் காவலாளியாக நியமிக்குமாறும் வலியுறுத்தியதுடன், கடமைக்கு வந்த மேற்படி காவலாளியைக் கடமைக்குச் சமுகமளிக்க விடாது தடுத்ததாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

"இந்தப் பாடசாலைக்கு காவலாளி மற்றும் பாடசாலை சிற்றூழியர்களை நியமிக்குமாறு கோரி, இருவரின் பெயர்களை அதிபர் ஊடாக பரிந்துரைத்து, கிழக்கு மாகாண சபைக்கு கடந்த காலத்தில் அனுப்பிவைத்தோம்.

இதுதொடர்பில் எந்தவிதப் பதிலும் இதுவரையில் எமக்கு வழங்கப்படாத நிலையில், ஏறாவூரைச் சேர்ந்த ஒருவரை இந்தப் பாடசாலைக்கு காவலாளியாக நியமித்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு எமது பகுதியைச் சேர்ந்த ஒருவரையே காவலாளியாக நியமிக்க வேண்டும். அது வரையில் இவ்வாறான நியமனங்கள் பெற்றுவருவோரை பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்கமாட்டோம்' என்று கூறினர். (வ)

## விற்பனை செய்வதற்கும் வாடகைக்கு வழங்குவதற்குமான கூறுவிலை கோரல்

மேற்படி சம்மேளனத்தில் கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த நிலையிலுள்ள பழைய இயந்திரங்கள், கருவிகள், மின்சார உபகரணங்கள், பொணெக்ஸ் பிளாஸ்ரிக் பெட்டிகள், பற்றரிகள் (65, 75, 100, 200 அம்பியர் 12வோட்ஸ்), மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்கும், நல்ல நிலையிலுள்ள 16.2 KWவலுவுள்ள ஜெனரேற்றர் (வாட்டக்கூலர்), குளிரூட்டி வாகனம் மற்றும் ஆள்கடல் மீன்பிடி பலநாள்படகையும் வாடகைக்கு விடுவதற்குமான கூறுவிலை கோரப்பட்டுள்ளது.

1. நாட்டமுள்ள விலைமனுதாரர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நேரடியாகப்பார்வையிட்டு கேள்வி விலைகளுக்கான ஆவணங்களை கூறுவிலை எனக்குறிப்பிட்டு மூடிய தபாலுறையிலிட்டு எதிர்வரும் 27.11.2014 அன்று முற்பகல் 10.30 மணிக்கு முன்னதாக தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அல்லது இதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டகத்தில் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
2. கேள்வி ஆவணங்களை 24.11.2014 தொடக்கம் 26.11.2014 வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் கேள்விப்படிவத்திற்குரிய மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5,000/= காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. மேலதிக விவரங்களை அலுவலகத்திலோ அல்லது 021 222 2347, 9797 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

அ.எமிலியாம்பிள்ளை, தலைவர்,
யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், (வ.து),
இல.100, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சி17658) (12.3.6)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை



தோற்றம் -03.08.1936
மறைவு.- 22.11.2003
திதி : 20.11.2014

பத்தொடு ஓராண்டும் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எம் மனதில்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
அச்செழு, நீர்வேலி. (54434)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் விநாயகமூர்த்தி



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் விநாயகமூர்த்தி 19.11.2014 புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக போதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் மேற்கு,
மாதகல்.
(54436)(5.3.6)
தகவல்: குடும்பத்தினர்.

## பதிலீடு இன்றி இடமாற்றம் வழங்குவதைத் தவிர்க்குக

### காத்தான்குடி கல்விக் கோட்டத்தில்

மட்டக்களப்பு, நவ.21
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள காத்தான்குடி கல்விக்கோட்டத்தில் பதிலீடு இன்றி எந்தவொரு ஆசிரியருக்கும் இடமாற்றம் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரி, மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அஹமட் லெப்பைக்கு காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவர் எம்.ஐ.எம்.சுபைர், செயலாளர் அஸ்ஸெய்க் ஏ.எல்.எம். சபீல் நழீமி ஆகியோர் கையொப்பமிட்டு செவ்வாய்க்கிழமை இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:
'2015ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இட மாற்றம் தொடர்பாக தங்களது பணிவான கவனத்தை இங்கு ஈர்க்க விரும்புகிறோம்.

மட்டக்களப்பு மத்தி வலயத்தில் கணிசமான பாடசாலைகளைக் கொண்ட எமது காத்தான் குடி கல்விக் கோட்டத்தில், அதிகமான ஆசிரியர்கள் இந்த வருட இறுதியில் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு விண்ணப்பித்துள்ளதாக அறிகி றோம். இவ்வாறு பதிலீடு இன்றி மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள், மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று நாம் கருதுகிறோம்.

எனவே, எமது பிரதேச மாணவர்களின் நல்னைக் கருத்திற்கொண்டு பதிலீடு இன்றி எந்தவொரு ஆசிரியருக்கும் இடமாற்றம் வழங்குவதை தவிர்த் துக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து கந்தசாமி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.46, குமரபுரம், பரந்தனை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தசாமி 20.11.2014 அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற காசிநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், கந்தவநேசன், கந்தவமதன், மதனிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலதி, சசிரேகா, கோபிராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிவர்ணன், கவிஷவன், கவிஷனா, அபிஷனா, அபிநுஜா, அபிஷ்ணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பரந்தன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.46, குமரபுரம்,
பரந்தன்.
(47937) (12.3.6)
தகவல்:
குடும்பத்தினர்.

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## பிறந்தநாள் வாழ்த்து



**வேலுப்பிள்ளை பாலவினாயகமூர்த்தி**
இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை தனது 70ஆவது பிறந்தநாளையும்
**பாலவினாயகமூர்த்தி பாலயோகமணி**
24.11.2014 திங்கட்கிழமை தனது 55ஆவது பிறந்த நாளைக் காணும் இருவரையும் பாலையடிப் பிள்ளையார் துணையுடன் நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள், நண்பர்கள்.


# பொன்சேகா கட்சியினரும் பொலிஸாரும் முறுகல்

கொழும்பு, நவ.21
சரத் பொன்சேகா கட்சியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்றுக் கடும் மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-



சரத் பொன்சேகாவின் குடியுரிமை மீள வழங்குமாறு கோரி பத்து லட்சம் கையொப்பங்களை பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக நிட்டம்புவையில் பொதுமக்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கையில் ஜனநாயகக் கட்சி முக்கியஸ்தர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர். நேற்று நிட்டம்புவையில் குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்கான அதே இடத்தில் அவாகளுக்கு சவால் விடும் வகையில் பொன்சேகா தரப்பினர் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன் போது அவர்கள் சிறிய ரக ஒலிபெருக்கியொன்றின் மூலம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுப்பதை பொலிஸார் எதிர்த்துள்ளனர்.

ஒலிபெருக்கி பயன்படுத்த தாம் அனுமதி பெற்றிருப்பதாக பொன்சேகா தரப்பினர் தெரிவித்தும், பொலிஸார் ஒலி பெருக்கி பயன்படுத்தப்படுவதைக் கடுமையாக ஆட்சேபித்துள்ளனர். இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையில் கடும் மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. காரசாரமான முறையில் இருதரப் பினரும் வாக்குவாதங்களில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# புலிகளைப் பிரிப்பதற்காகவே மாத்தையாவுக்கு ஆயுதம் - சஜித்

விடுதலைப் புலிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தவே தமது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா, கோபாலசாமி மஹேந்திரராஜாவுக்கு (மாத்தையா) ஆயுதங்களை வழங்கினார் என்று சஜித் பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹராமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நாட்டை பிரிப்பதற்காக அவர் மாத்தையாவுக்கு ஆயுதங்களை வழங்கவில்லை, விடுதலைப் புலிகளுக்குள் பிளவை ஏற்படுத்தவே அவர் ஆயுதங்களை வழங்கினார். எனினும் தற்போதைய அரசு, பிரேமதாஸா விடுதலைப் புலிகளை சக்திமயப்படுத்தியதாக குற்றஞ் சுமத்தி வருகின்றது."- என்று தெரிவித்துள்ளார். (ற)


## மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்**
**(சேவிஸ் மாமா, உருத்திரபுரம்)**

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உருத்திரபுரம், 8ஆம் வாய்க்காலை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம், செட்டித் தெரு, இல. 06 ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் கடந்த (18.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பராசு) மற்றும் நாகம்மா (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வித்துவான் பொன் அ.கனகசபை -பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைச்செல்வியின் (ஓய்வுநிலை லிகிதர், கச்சேரி-கிளிநொச்சி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சேயோன் மற்றும் ஜனகன் (பிரான்ஸ்), சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாமளா (பிரான்ஸ்), திருக்கேதீஸ்வரன் (கிராம சேவையாளர் நல்லூர் J/106) ஆகியோரின் அன்பு மாமனும், அபிசனா, வைஸ்ணவி, கௌத்தமி ஆகியோரின் அன்புப் பேரனும், காந்திமதி (பிரான்ஸ்), தங்கமணி (டென்மார்க்), துவாரகாதேவி (கனடா), புஸ்பராணி (ஜேர்மனி), சிவமணி (கனடா), குகதாசன் (பிரான்ஸ்), கலைமதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாஜினி, காலஞ்சென்ற காந்தியழகன் மற்றும் சத்தியதேவி, அருளரசி, தற்பரானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேசமூர்த்தி (துரைச்சாமி-டென்மார்க்) மற்றும் தனபாலசிங்கம் (கனடா), தேவகுமார் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (கனடா), மைதிலி (பிரான்ஸ்), ரேணுகா (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சிவதாசப்பிள்ளை, ஜெயராணி, குலசேகரம் ஆகியோரின் அன்புச் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் 6ஆம் இலக்கம் செட்டித்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
தொ.இ: **021 222 1964**

(54442)(10.6)

## மரண அறிவித்தல்

**பெரியதம்பி கனகரத்தினம்**



வட்டுக்கோட்டை, சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கனகரத்தினம் (முன்னாள் நுகர்ச்சி முகாமையாளரும், பொது முகாமையாளரும்-சங்கானை ப.நோ.கூ. சங்கம், வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க தலைவரும்) நேற்று (20.11.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பெரியதம்பி (பொறியியலாளர்) மற்றும் மாதிராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் சரஸ்வதி (ஓய்வுநிலை ஆசிரியை), தங்கச்சியம்மா (இராசு) காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் புஸ்பதேவி (ஓய்வுநிலை தாதி, மூளாய்-வைத்தியசாலை), தவானந்தம், தங்கேஸ்வரி, செல்வராணி (துர்க்காதேவி தேவஸ்தான மகளிர் இல்ல மேற்பார்வையாளர்) ஆகியோரின் சகோதரரும், ஜெயலட்சுமியின் (ஓய்வுநிலை லிகிதர்-சங்கானை ப.நோ.கூ.சங்கம்) அன்புக் கணவரும், ஜெகஜீவகன் (முன்னாள் மாணவன், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம்), பிரதீபன் (ஆஸ்திரேலியா), பெரியதம்பி (கோபி-சமுர்த்தி உத்தியோகத்தர்- சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரின் தந்தையும், ஜீவகன் (லண்டன்), பாலசரஸ்வதி (கொழும்பு), விஜயலட்சுமி (லண்டன்), இராஜலட்சுமி (கனடா), காலஞ்சென்ற ஜெகதேவன் மற்றும் நாவுக்கரசு (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான க. கணேசலிங்கம் (முன்னாள் பணிப்பாளர்-கெயர் சர்வதேசம்-முல்லைத்தீவு), க. தர்மலிங்கம் (லண்டன்) மற்றும் தேவலிங்கம் (கனடா) லக்சுமிகாந்தா (லண்டன்), கௌரி (நோர்வே) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் சங்கரத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(54444)(10.6)

## மரண அறிவித்தல்

**சின்னர் செல்லப்பா**



பலாலி கிழக்கு, பலாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், அச்சுவேலி பத்தமேனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் செல்லப்பா 18.11.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம் அவர்களின் அன்புக் கணவரும், சிவகுருநாதன் (கனடா), சிவாஈஸ்வரி, அம்பிகை, சிவனேசன், சிவலோகநாதன், அமரர் சிவகுமார், சிதம்பரநாதன் (லண்டன்), சீவரட்ணம் (ஜேர்மனி), பத்மாவதி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லக்கிளி (கனடா), கமலநாதன், ராஜினி, வத்சலா, வினோதினி (லண்டன்), சிவரஜனி (ஜேர்மனி), புவனேந்திரன், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமாவும், அகிலன் (கனடா), சர்மிலன் (கனடா), அருள்ராஜ் (ஜேர்மனி), குமுதினி, சிந்துஜன், டிலக்சன், சுஜிவன், சஞ்சீவன், பர்மிலன், அஸ்வினி (ஜேர்மனி), வினுஷன், சருண்ஜா (லண்டன்), சானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, சின்னையா, ஆச்சிப்பிள்ளை, பொன்னு ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சுப்பிரமணியம், கந்தவனம், ஆச்சிப்பிள்ளை மற்றும் ஐயாத்துரை, செல்லத்துரை, பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பத்த மேனி தீர்த்தாங்குளம் உல்லிவிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வைரவர் கோயிலடி, அச்சுவேலி, பத்தமேனி.**

(54437)(10.6)

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**செல்வி லீலாவதி சின்னத்துரை**



வட்டுக்கோட்டை, நாவலடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி கற்குளி, முதலாம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட செல்வி லீலாவதி சின்னத்துரை நேற்று (20.11.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா சின்னத்துரை (முன்னாள் புகையிரத அதிகாரி-மலேசியா)-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், அன்னரத்தினம், குலராசா (கணக்காய்வு உத்தியோகத்தர்-மலேசியா), ராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலாயுதம், ரங்கசாமி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இரத்தினவேல் (யாழ். மாநகர சபை), சந்திரன் (டென்மார்க்), பாலச்சந்திரன் (டென்மார்க்), செல்வச்சந்திரன், சந்திரகுமாரி, சந்திரவதனி (பிரான்ஸ்), ரவீந்திரராஜ், காலஞ்சென்ற சுவேந்திரராஜா மற்றும் மகேந்திரரா்ஜா ஆகியோரின் சிறிய தாயும், நிமலினி தேவி, விமலாதேவி, கண்ணகி, சுந்தரராஜன், வனஜா, சாந்தினி, ரோகினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2014) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்குழி முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி.**

(C/17662)(10.6)

தகவல்:
**வே.அன்னரத்தினம் (சகோதரி)**

# தொடர்ச்சிகள்

## இரகசியமாக

பட்டன.
இந்த நிலையில் நேற்றுக் குறித்த காணிகள் அளவீடு செய்யப்பட்டுள்ளன.
இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.
இந்த அளவீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோரிடம் காணி உரிமையாளர்கள் முறையிட்டுள்ளனர். (த-55-18)

## மாணவியை

குறித்த மாணவி பக்கத்து வீட்டில் கையடக்கத் தொலைபேசிக்கு மின்வலு ஏற்றுவதாகவும், 19 ஆம் திகதியும் அவ் வாறு சென்றபோது முதியவர் மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.
மாணவி கொடுத்த முறைப்பாட்டை அடுத்து முதியவரைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். மாணவி யாழ். போதனா வைத்தியசாலை யில் மருத்துவ பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பல்கலைக்

வழங்கப்பட்டுள்ளன. கலைப் பீடம் தொடர்ந்து இயங்கும். விஞ்ஞான பீடம் தொடர்ந்து இயங்குகிறது. அதற்குரிய விடுமுறை ஏற்கெனவே ஒழுங்கமைக்கப்பட்டபடி கடந்த 8 ஆம் திகதி முடிவடைந்து செயற்பாடுகள் தொடங்கியுள்ளன. அடுத்த விடுமுறை 7 வாரங்கள் சென்ற பின்னர் என்பது வழமையான தாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## வடக்கில்

ணங்களை விடக் கூடுதலான இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. போர் முடிந்த பின்னரும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பெருமளவில் இராணுவம் நிலைகொண்டிருப்பதன் காரணமாக ஆனையிறவு போன்ற இடங்களில் பல தமிழர்களின் காணிகள் இராணுவத்துக்குத் தேவைப்படுகின்றது. அதற்காக அரசு மக்களின் காணிகளை இராணுவத்துக்குப் பெருமளவில் வழங்கிவருகின்றது- என்றார். (த-18)

## அடுத்த

யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் உயர் அதிகாரியொருவரிடம் கேட்டபோது, அது தொடர்பில் தமக்கு ஏற்கெனவே உயர்மட்டத்தில் இருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் திகதி இன்னும் தெரியவரவில்லை எனவும், ஆனால் அடுத்த மாதம் இரண்டாம் வாரமளவில் அவர் வருகை தரவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி கூறினார். அத்துடன் அன்றைய நாள் வடமராட்சியில் இடம்பெறும் கூட்டங்கள் சிலவற்றிலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளதாக அறியவருகிறது (த-109)

## காணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில் திருவடிநிலைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 27 ஏக்கர் காணி நேற்று அளவீடு செய்ய விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து காணி உரிமையாளர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.
ஆனாலும் நிலஅளவையாளர்கள் வரவில்லை. அதன்பின்னரே அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். (த-5-21)

## படை முகாம்

வழங்கச் சம்மதித்தமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்த பின்னரும், மக்கள் அகதிகளாக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இராணுவ முகாம்கள் அமைப்பதற்காக மக்களின் காணிகள் முப்படையினராலும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. வலி.வடக்குப் பிரதேசம் முற்று முழுதாக அபகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், உள்ளூரில் உள்ள படைமுகாம்கள் அமைந்துள்ள காணிகள் அளக்கப்பட்டு, அபகரிக்கும் முயற்சிகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.
ஆனால் தமது பூர்வீக வாழ்விடத்தை வழங்க மறுக்கும் மக்கள் தமது மக்கள் பிரதிநிதிகளின் உதவியுடன் காணி அபகரிப்பை எதிர்த் துப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தடுத்து வருகின்றனர். தமது காணியைப் படைகளுக்கு விற் கத் தயார் இல்லை என்று எழுத்து மூலம் தெரிவித்து வருவதுடன், சிலர் வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளனர்.
ஆனால் ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்தது போல் ஒரு சிலர் அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு, படையினரதும், அரச அதிகாரிகளினதும் ஆசைப் பேச்சுக்களுக்கு மயங்கி அல்லது பயமுறுத்தலுக்கு அடிபணிந்து தமது பூர்வீகக் காணிகளை விற்கச் சம்மதம் தெரிவித்து வரும் விரும்பத்தகாத சம்பவங்கள் அரங்கேறத் தொடங்கியுள்ளன.
அண்மையில் மாதகல் பிரதேசத்தில் இடம்பெற்ற படைமுகாம் அமைப்புக்கான நில அளவை முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் சென்றபோது, அந்த நில அளவையாளர், அந்தக் காணிச் சொந்தக்காரரின் சம்மதக் கடித்தைக் காண்பித்து தமது பணியை மேற்கொண்டுள்ள நிலையில் எம்மால் எதுவும் செய்ய முடியாத அவல நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது.
படையினருக்கான முகாம்களை அமைப்பதற்காக காணிகளை எந்த விதத்திலாவது அரசிடம் விற்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (த-5)

## பொலித்தீன்

அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:-
தாங்கள் அமைச்சர் பதவி ஏற்று சில மாதங்களில் வடக்கு மாகாணத்தில் பொலித்தீன் பாவனையை 6 மாதங்களில் கட்டுப்படுத்தப் போவதாகக் கூறியதைப் பத்திரிகை மூலம் அறிந்து என்னைப் போன்று பலரும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் பல மாதங்கள் சென்று விட்டன, இன்னும் பொலித்தீன் பாவனை குறைந்தபாடில்லை. எங்கு பார்த்தாலும் மக்கள் சொப்பிங் பைகளைப் பாவித்து விட்டு எறிந்து விடுகிறார்கள்.
வீதிகள், ஒழுங்கைகள் , சந்தைகள், மயானங்கள், விளை நிலங்கள் எங்கும் இவை நிறைந்து காணப்படுகின்றன. இந்தப் பைகளைப் புதைத்தால் உக்காமலும், எரித்தால் அதன் புகை சுகாதாரத்துக்குச் சீர்கேடாகவும் உள்ளது.
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட கோம்பயன் மணல் மயானச் சுற்றாடல் முழுவதும் சொப்பிங் பைகள் நிறைந்து காணப்படுகின்றன. தற்பொழுது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் இந்த பைகளில் தேங்கி நிற்கும் மழை நீரால் நுளம்புகள் உற்பத்தியாகி டெங்கு நோய் தொற்று அபாயம் அதிகம் உண்டு. மக்கள் தங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் பாவித்த பொலித்தீன் பைகளை மூட்டைகட்டி வீதிகளிலும் பொது இடங்களிலும் இரவு நேரங்களில் வீசி விடுகிறார்கள். பொலித்தீன் பைகளை உண்ட கால்நடைகளும் இறந்துள்ளன.
எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தி கடந்த காலங்களைப் போல் கடதாசிப் பைகளை பாவிப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்து மக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது. (த-115)

## வலி.மேற்குப்

இதனை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது என்று சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், சங்கானை தெற்கில் ஜே/180 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பிரதேச சபைக்குரிய காணியில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் உட்பட 28 குடும்பங்கள் சுமார் 30 வருடங்களுக்கு மேலாகக் குடியிருக்கின்றன. தாம் குடியிருக்கும் காணி யைத் தமக்குச் சொந்தமாக எழுதித் தருமாறு குறித்த குடும் பங்கள் பல தடவை கோரிக்கை விடுத்துள்ளன.
அதனால் அவர்களுக்கு அதனை வழங்கத் தீர்மானிக் கப்பட்டது. அதற்கான சட்ட நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு உரிய முறைப்படி அவை வழங்கப்பட்டன.
அவர்கள் இருந்த 50 பரப்பளவுடைய காணியே அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டது.
அதேவேளை, அராலி மத்தி ஊறெட்டி கிராமத்திலும் தமது சபைக்குரிய காணியில் பல குடும்பங்கள் பல வருடங்களாகக் குடியிருக்கின்றன. அவர்களில் 18 பேருக்கு அடுத்த ஒரு மாத காலத்தில் அவர்கள் குடியிருக்கும் காணியைச் சொந்தமாக எழுதிக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (த-4)

## வவுனியாவில்

வீடமைப்பு அதிகாரசபை அமைத்துக் கொடுத்த தற்காலிக வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளன. அவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கப்படவேண்டும். இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடு வழங்கப்படாத, வீட்டுத் தேவை உள்ள எஞ்சியவர்களுக்கும் வீடு வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வீதி அபிவிருத்தியின் கீழ், வவுனியா - செட்டிக்குளம் வீதி, வவுனியா - மகாறம்பைக் குளம் வீதி, வவுனியா - சிதம்பரபுரம் வீதி, நெடுங்கேணி - மருதோடை வீதி என்பன புனரமைக்கப்படவேண்டும். வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.
விவசாய அபிவிருத்தியின் கீழ் குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கல்வி நடவடிக்கையின் கீழ், நெடுங்கேணி மகாவித்தியாலயம், வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரி, வவுனியா விபுலானந்தா கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம், செட்டிக்குளம் மகாவித்தியாலயம் என்பவற்றுக்கு கேட்போர் கூடம், விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
வவுனியா நகரமத்தியில் இராணுவத்தினரிடம் உள்ள கலாசார மண்டபம் பாவனைக்கு வழங்கப்பட வேண்டும். பூந்தோட்டத்தில் உள்ள கூட்டுறவு பயிற்சிக் கல்லூரிக் கட்டடம் இராணுவத்தினரிடம் உள்ளது. அது கூட்டுறவுத் திணைக்களத்திற்கு வழங்கப்படவேண்டும். வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானம் விமானப்படையினரிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-5)

## வாக்களிக்கும்

2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலே, எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்படவுள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி, இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர் பட்டியல் வெளியிடப் பட்டது.
வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் நடைபெறும் சகல தேர்தல்களிலும் குறித்த வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும். அதனடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் 2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப் படவுள்ளது.
புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா? என்பதை 1919 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதனைவிட, ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்திலும், வாக்காளர் பெயர் பதியப் பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-5)

## எதிர்பார்த்து

போகின்றவர் யார் என்பதை நான் எதிர்பார்த்திருக்கிறேன். யார் கடும் தோல்வியை அடையப் போகிறார்கள் என்று காத்திருக்கிறேன்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.
"ஜானாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பிலான அறிவித்தல் வழங்கும் பத்திரத்தில் இன்று (நேற்று) கையொப்பம் இட்டு அதனை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன். இது ஜனநாயக நாடு. அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான பொறுப்பை மக்களுக்கு நான் வழங்கியுள்ளேன். ஒரு சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று நம் நாட்டில் ஆட்சி மாற்றத்தை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் இங்கு ஜனாதிபதியை மக்கள்தான் தெரிவு செய்ய வேண்டும்.
என்னோடு போட்டியிடப் போகின்றவர் யார் என்பதை நான் எதிர்பார்த்திருக்கிறேன். யார் கடும் தோல்வியை அடையப் போகிறார்கள் என்று காத்திருக்கிறேன். எதிர்க்கட்சிகளால் இன்று வரை என்னுடன் போட்டியிட ஒருவரைக்கூட நியமிக்க முடியவில்லை" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## இந்திய

மீனவர்கள் ஐவரும் நேற்று மதியம் இந்தியா சென்றனர். அங்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர் சென்னைக்குச் சென்றனர் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி மூர்த்தி தெரிவித்தார்.
"நேற்று பி.ப. 2 மணியள வில் 5 பேரும் கொழும்பிலி ருந்து புதுடில்லி சென்றனர். அங்கு பிரதமரைச் சந்தித்த பின்னர் மாலை 5.30 அளவில் சென்னைக்குத் திரும்பினர்"- என்று அவர் கூறினார்.
தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் 2011ம் ஆண்டில் இலங்கைக்குப் போதைப் பொருள் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதனை அடுத்து அவர்களுக்கு கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. பின்னர் இருநாட்டு உயர்மட்டப் பேச்சை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். ஆயினும் அவர்களுடன் கைதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை. (ற-4)

## ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியின் நான்கு ஆண்டு காலம், நேற்று முன்தினம் 19 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வந்திருந்தது. அதனடிப்படையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பில் அவர் நேற்றுக் கையொப்பம் இட்டார்.
ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு, நேற்று மதியமே உடனடியாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் திணைக்களத்தின் வேட்புமனுத் தாக்கலுக்கான அறிவிப்பு இன்றைய தினம் வர்த்தமானி பிரசுரம் மூலம் வெளிவரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தேர்தல்கள் திணைக்களத்தின் வர்த்தமானி பிரசுரம் வெளியாகி 24 நாள்களில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும். அதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை வேட்பாளர்கள் செலுத்த வேண்டும். வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்றே, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும்.
வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 28 தொடக்கம் 44 நாள்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் இடம்பெறுவதுடன், ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-5)

## நீதிபதிக்கு

பிடித்த சிறைச்சாலை உத்தியோகத்தர், பொலிஸாரிடம் ஒப்படைத்தார். இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
யாழ்ப்பாணம் திறந்த நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்தச் சம்பவம் நேற்று நடந்தது. பல்வேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதானவர் யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த கஜேந்திரன். அவருக்கு எதிரான வழக்கில் யாழ்.மேல்நீதிமன்றினால் 2 வருட சிறைத் தண்டனை முன்னர் விதிக்கப் பட்டிருந்தது. அவருடன் கைதான அதே இடத்தைச் சேர்ந்த வசந்தகுமார் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆயினும் அவர்களுக்கு எதிரான வழக்கு நடைபெற்று வந்தது.
இந்த நிலையில் குறித்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போது விளக்கமறியலில் உள்ள கஜேந்திரன் நீதிமன்றில் எதிரிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். அவருடன் சேர்ந்து வழக்குடன் தொடர்புடைய வசந்தகுமாரும் எதிரிக் கூண்டில் ஏறினார். எதிரிக் கூண்டில் நின்றவாறு வசந்தகுமார் என்பவர் தனது கையில் மறைத்து வைத்திருந்த சுருள் பொதி யொன்றை கஜேந்திரனின் கைக்குள் வைத்துள்ளார். அதனை அங்கு நின்றிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் கவனித்துவிட்டார். உடனே பொதி வைத்திருக்கும் கையைப் பற்றிக் கொண்டு, ஏதோ பொருள் வைத்துள்ளார் என்று குறித்த உத்தியோகத்தர் நீதிவானிடம் கூறினார். நீதிவான் அதனை வெளியே எடுக்குமாறு கூறினார். அது நீதிவான் முன்னிலையில் வைத்துப் பிரித்துப் பார்க்கப் பட்டது. அதன் போதே அந்தச் சுருள் பொதியில் க்ஞ்சா இருந்தமை தெரியவந்தது.
அவர்கள் இருவரும் உடனேயே விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். அதன்போது பொதியை வைத்திருந்தவர் சகாவே தந்தார் என்றும், பொதியைக் கொடுத்தவர் வெளியில் உள்ள ஒருவர் அதனைத் தந்து குறித்த நபரிடம் கொடுக்குமாறு கூறியிருந்தார் என்றும் வாய் மூலமாகக் கூறியுள்ளனர்.
அது தொடர்பில் குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தரும் நீதிமன்றில் வாய்முறைப்பாடு வழங்கினார். அதனையடுத்து கஞ்சா வழங்கிய சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டு விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டது. (ற-4)

## குற்றங்களும் கைதுகளும்

வென்னப்புவ

### கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

வென்னப்புவ – வைக்கால் சிந்தாத்திரிய பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் என்பவற்றை நேற்று முன்தினம் கைப்பற்றியதுடன் இருவரை கைது செய்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பிரதேசத்தில் ஜின்கங்கைக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியிலேயே இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வந்துள்ளது. இம்முற்றுகையின் போது கசிப்பு பெரல்கள், செப்புக் கம்பி, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கு வென்னப்புவ பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர். (வ)

கிளிநொச்சி

### கஞ்சா வைத்திருந்தோர் கைது

கிளிநொச்சி 55 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த இருவரும், பாரதிபுரத்தைச் சேர்ந்த ஒருவரும் கஞ்சாவுடன் திங்கட்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது குறித்த நபர்கள் தங்களுடைய குற்றங் களை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதவான் எம்.ஐ.வகாப்தீன் தலா பத்தாயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார்.
இதேவேளை கண்டாவளைப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கபட்டது. (வ–18)

சிலாபம்

### கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர் பிடிபட்டார்

முகுணுவட்டவான விலத்துவ பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்து வந்த ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.
விலத்துவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபரிடமிருந்து இரண்டரைக் கிலோ கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
சிலாபம் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பீ. சாலிய த சில்வாவின் ஆலோசனையின் பேரில் சிலாபம் பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இந்தச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மித்தெனிய பிரதேசத்திலிருந்து மொத்தமாக கஞ்சாவை கொண்டு வந்து சந்தேக நபர் விற்பனை செய்து வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.
மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக சிலாபம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (வ)

அக்கரைப்பற்று

### சட்டவிரோத சிகரெட்டுக்களை வைத்திருந்தவர் மாட்டினார்

சட்டவிரோதமாக வெளிநாட்டுச் சிகரெட்டுகளை விற்பனைக்காக வைத்திருந்த வேளையில் அக்கரைப்பற்று பொலிஸாரின் திடீர் சோதனையின் போது நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.
அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட கோல்ட் சீல்ட் ரக சிகரெட்டுகளை தனது வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்ட நபரை அக்கரைப்பற்று நீதிவான் சமுகத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். பசீல், குறிப்பிட்ட வர்த்தகருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

# தொழில் வாய்ப்புகளின்றி மட்டக்களப்பில் 180,000 பேர்

## அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.21
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் தொழிலின்றி வாழ்வதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.
உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் ஏற்பாட்டில், கொரிய நாட்டு வைத்தியர்களைக் கொண்ட வைத்திய முகாமின் ஆரம்ப நிகழ்வு புதுக்குடியிருப்பு சித்த ஆயுள்வேத மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'மட்டக்களப்பு மாவட்டத்தில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரம் ஒன்றின்படி, மாவட்டத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் தொழிலின்றி வாழ்ந்துவருகின்றனர். இந்த நிலையில், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.
கடந்த 5 வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டம் பெரியளவிலான அபிவிருத்திகளைக் கண்டுள்ளது.
இந்த மாவட் டத்துக்கு 54 ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
இந்த நிதியின் மூலம் மட்டக்களப்பு மாவட்டம் பெரியளவில் அபிவிருத்தி கண்டுள்ளது.
அந்த வகையில், கித்துள் மற்றும் உறுகாமம் குளங்களை இணைத்து' பெரிய அளவில் அபிவிருத்தி' செய்யும் மிகப் பெரிய வேலைத்திட்டமும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.
அதற்காக, 804 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த வருடம் சுமார் 5,000 மில்லியன் ரூபா நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன"- என்றார். (வ)

## உடை மாற்றும் கட்டடம் கன்னியாவில் திறப்பு

திருமலை, நவ.21
வரலாற்றுப் பிரசித்திபெற்ற கன்னியா வெந்நீரூற்று கிணற்றுப்பிரதேசத்தில் சுற்றுலாப்பயணிகளின் நலன்கருதி உடை மாற்றும் கட்டடம் ஒன்று இன்று திருகோணமலை மாவட்ட அரச அதிபரும் மாவட்டச் செயலாளருமான மேஜர் ஜெனரல் ரிதிஸ்ஸ ரஞ்சித் டி சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.
இந்தக்கட்டடத்தில் உடை மாற்றும் அறைகளும் ஒரு கிணறும் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் பலர் நன்மையடைவார்கள். இதுவரை காலமும் கன்னியா வெந்நீரூற்று கிணற்றுப்பகுதியில் குறித்த வசதி இன்றி காணப்பட்டமையால் சுற்றுலாப் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.



குறித்த கட்ட நிர்மாண வேலைகளை இராணுவத்தின் 6 ஆவது ரெஜிமேன்ட் பிரிவு மற்றும் 2 ஆவது பொறியியல் ரெஜிமேன்ட் பிரிவினர் இணைந்து மேற்கொண்டிருந்தனர். (வ)

## திருச்சி முகாமிலுள்ள 23 இலங்கையர்கள் மருத்துவமனையில்

திருச்சி, நவ.21
இந்தியா - திருச்சி சிறப்பு முகாமிலுள்ள 23 இலங்கையர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
திருச்சி சிறப்பு முகாமில் 5 தினங்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 23 இலங்கையர்களே சுகவீனமுற்றநிலையில்நேற்று மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
திருச்சி அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 23 பேரில் 7 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த 15 ஆம் திகதி முதல் அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஐ.நா. அகதிகள் தூதரகத்தில் பதிவு செய்தோருக்கு அனுமதியில்லை

### ஸ்கொட் மொரிசன் தெரிவிப்பு

சிட்னி, நவ.21
ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தில் பதிவு செய்து அகதி அந்தஸ்து கோரியுள்ளவர்கள் தொடர்ந்தும் ஆஸ்திரேலியாவில் வசிக்க அனுமதி வழங்குவதில்லை என்று ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.
அந்தநாட்டு குடிவரவு மற்றும் கரையோர பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.
சட்ட விரோதமாக வெளிநாட்ட



வர்களை இந்தோனேசியாவுக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குள் குடியேற்ற ஆட் கடத்தல் வியாபாரிகள் தற்போது முனைப்புக் காட்டி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.
இதன்காரணமாகவே ஆஸ்திரேலிய அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை, இந்திய, பங்களாதேஷ் பிரஜைகள் இவ்வாறு இந்தோனேசியா வழியாக ஆஸ்திரேலியா வுக்குள் செல்ல முயற்சித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கையில் நடைபெறும் நிகழ்வு எதிலும் இந்தியா பங்கேற்கக் கூடாது

## வேல்முருகன் வலியுறுத்து

சென்னை, நவ. 21
தூக்கு மேடையில் நிற்கும் 5 மீனவர்கள் விடுதலையாகி தமிழகம் வரும் வரை இலங்கையில் நடைபெறும் எந்தவொரு நிகழ்ச்சியிலும் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி. வேல் முருகன் கோரிக்கை விடுத் துள்ளார்.
இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் தலைநகர் கொழும்பில் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை சார்க் மற்றும் ஆசியான் நாடுக ளின் இராணுவத் தளபதிகள் மாநாடு நடைபெற உள்ளது.
இந்த மாநாட்டில் இந்தியாவின் இராணுவத் தளபதியும் பங்கேற்க இருப்பதாக செய்திகள் வெளியாகி இருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
கால் நூற்றாண்டுகாலமாக



இந்தியாவின் குடிமக்களான 600 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களைப் படுகொலை செய்துள்ளது இலங்கை அரசு. தற்போதும் தமிழ்நாட்டு மீனவர்களைச் சிறைபிடிப்பதும் அவர்களின் வாழ்வாதாரமான படகுகளை பிடித்து வைப்பதுமான அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகிறது.
அத்துடன் பொய்க்குற்றச் சாட்டின் கீழ் அப்பாவி மீனவர்களை 3 ஆண்டுகாலம் சிறையில் அடைத்து சாவுத் தண்டனை விதித்து கருணை காட்டுவதாக இனக் கொலையாளி ராஜபக்ஷ கூறுகிறார்.
ஆனால் வாக்குறுதி அளித்தபடி 5 அப்பாவித் தமிழக மீனவர்களை இன்னமும் இலங்கை அரசு விடுதலை செய்ய வில்லை.
மாறாக இலங்கையில் உள்ள அமைச்சர்கள், தமிழக மீனவர்களின் குடும்பங்களை தொலைபேசியில் அழைத்து மேல்முறையீட்டு மனுவை வாபஸ் வாங்க வேண்டும் என்று மிரட்டுகிறார்கள் என்ற செய்தியும் வந்துள்ளது.
5 மீனவர்களுக்கு ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை நீதித்துறை சாவுத் தண்டனை விதித்திருப்பதால் தமிழகமே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.
இந்த நிலையில் இலங்கையில் நடைபெறும் பாதுகாப்பு மாநாடு உட்பட எந்த ஒரு நிகழ்ச்சியிலும் இந்தியா கலந்து கொள்ளாமல் புறக்கணித்து தனது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்"- என்றுள்ளது. (வ)

# வடக்குக் கூட்டுறவு ஊழியரின் தொழிற்சங்க மாநாடு நாளை

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் மூன்று கோரிக்கைகளை முன் வைத்து நடத்தும் தொழிற் சங்க மாநாடு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்.

கூட்டுறவு இணைப்பாளர்களும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுமான கே.சயந்தன், ப.அரியரத்தினம், வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.தவராசா, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், உதவி தொழில் ஆணையாளர் மீனலோஜினி ஜெகதீஸ்வரன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு அரச அதிபர் அ.வேதநாயகம், வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, மன்னார் அரச அதிபர், எம்.வை. எஸ்.தேசப்பிரிய ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

அத்துடன் வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள் போன்றோரும் நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு நீண்ட காலமாகச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமையினால் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவுப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஐம்பது வீதத்தால் அதிகரித்து வழங்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். கடந்த பல வருடங்களாக சேவையாற்றி வரும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

மழை, வெயில், கடமை நேரம் பார்க்காது மக்களுக்கு சேவையாற்றி வரும் இந்தக் கூட்டுறவுப் பணியாளர்களின் எதிர் காலம் குறித்து அவர்களை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்வாங்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன் வைத்துக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாநாட்டில் கூட்டுறவுப் பணியாளர்கள் முழுமையாக ஒத்துழைப்பை வழங்குமாறு சங்கத்தின் செயலாளர் எஸ்.கெங்காதரன் கேட்டுள்ளார்.

வடக்கில் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் இந்த மாநாட்டுக்குப் பெரும் எண்ணிக்கையான கூட்டுறவுப் பணியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். மாநாடு காலையில் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை தொடர்ந்து இடம்பெறும்.

மாநாட்டில் கூட்டுறவு ஊழியர்கள்கலந்து கொள்ள வசதியாக அவர்களுக்கு அன்றைய தினம் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சங்கங்களின் அத்தியாவசிய சேவைகளைப் பாதிக்காத வகையில் ஊழியர்கள் இதில் கலந்து கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிளைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தவிர்ந்த ஏனையோர் இதில் பங்கேற்க வேண்டும் எனக்கோரப்பட்டுள்ளது. (த-17)




மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பல இடங்களிலும் நேற்று இனந்தெரியாதவர்களால் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. மாவீரர் கருத்தை மனதில் நிறுத்தி வணக்கம் செலுத்த ஒன்றிணைவோம் என்னும் தலைப்பில் தாயகம் மலர தன்னுயிர் ஈந்த தமிழீழ வீரர்களுக்கும் அரச பயங்கரவாதத்தினால் கொல்லப்பட்ட எம்மவர்க்கும் எங்களின் கண்ணீர் சிந்திய வீர வணக்கங்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஒட்டப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கிழித்து எறிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-106)




யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் எஸ்.டி.மூர்த்தியினால் இரு நூலகங்களுக்கு ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் கோண்டாவில் பொது நூலக நூலகர் எஸ்.அனித்தா, அனலைதீவு பொது நூலக நூலகர் எஸ்.தர்மிலா ஆகியோரிடம் வழங்கப்பட்டன. இவ்விரு நூலகங்களும் கடந்த 18ஆம் திகதி இலங்கை அரசின் விருதைப் பெற்றமையைப் பாராட்டி யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் மேற்படி நூல்கள் கையளிக்கப்பட்டுள்ளன.
அத்துடன் இலங்கை அரசின் விருதினைப் பெற்ற முல்லைத்தீவு மாந்தைப் பொது நூலகம், மன்னார் நானாட்டான் பொதுநூலகம் ஆகியவற்றுக்கும் ஒரு தொகுதி நூல்கள் கையளிக்கப்பட்டன. (த-10)

# சந்திரிகாவுடன் மனோ நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, நவ. 21

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, பொது எதிரணியின் இடைக்கால ஆட்சியமைப்பில் முக்கிய பாத்திரத்தை வகிப்பார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு சந்திரிகா உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

சந்திரிகா ஜனாதிபதி தேர்தல் பரப்புரையிலும், அதை தொடர்ந்த இடைக்கால ஆட்சியமைப்பிலும், எதிர்கால அரசமைப்பிலும் முக்கிய பாத்திரம் வகிப்பார். அந்த உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார். உட்கட்சிப் பிரச்சினைகளிலும், தனிநபர்களின் நிகழ்ச்சி நிரல்களிலும் சிக்குண்டு தோல்வியடையக் கூடிய ஒரு தேர்தலில் பங்கு பெற ஜனநாயக மக்கள் முன்னணி தயாரில்லை என்று நான் அவரிடம் தெரிவித்தேன்.

அந்த நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாகத் தெரிவித்த அவர், வெற்றியடையக் கூடிய தனது மாற்று யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையினாலேயே தாம் இதில் பங்களிக்க முன்வந்துள்ளதாக எம்மிடம் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கு அணியும், ஏனைய அனைத்து கட்சிகளுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எதிரணி பொது வேட்பாளர் யாரென அதிகாரப்பூர்வமற்ற முறையில் முடிவு செய்யப்பட்டுவிட்டது. அதுபற்றிய கருத்து பரிமாற்றங்களுக்கு இனி இடமில்லை. பொது வேட்பாளர் யாரென இப்போது பகிரங்கமாக அறிவிக்க முடியாது. நிச்சயமாக வெற்றி பெற்று இந்த நாட்டிலே நல்லாட்சியை நிலை நாட்டுவோம் என்ற நம்பிக்கையை நமக்கு தரக் கூடிய வேட்பாளராக அவர் இருக்கின்றார் என்பதை இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எதிரணிக் கட்சி தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் இன்று அது அதிகாரப்பூர்வமாக நாட்டுக்கு அறிவிக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# இலங்கையை சீர்குலைக்க முயற்சித்தார் சொல்ஹெய்ம்

*ஆதாரம் இருக்கிறது என்கிறார் கெஹலிய*

போர்க்காலத்தில் இலங்கையை சீர்குலைப்பதற்கான முயற்சியில் எரிக் சொல்ஹெய்ம் ஈடுபட்டார் என்றும், அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

'சமாதானபேச்சுக்களின் போது எரிக் சொல்ஹெய்ம் எப்படி செயற்பட்டார் என்பது எமக்கு தெரியும். இலங்கையை சீர்குலைப்பதற்கு முயற்சித்தார். அதற்கான ஆதாரங்களை என்னால் சமர்ப்பிக்க முடியும். எமது தேசத் தலைவரின் கூற்றில் பொய் எதுவும் இல்லை. சொல் ஹெய்ம்தான் பொய் சொல்கின்றார்- என்றார் கெஹலிய. (த-சி)

# யாழ்.- பளை ரயில் சேவை கிளிநொச்சி வரை வேண்டும்

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரை நடத்தப்படவுள்ள ரயில் சேவையைக் கிளிநொச்சி வரை நடத்துமாறு பல தரப்பினராலும் கோரப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள மாவட்ட செயலகம், பல்கலைக் கழக வளாகம் உட்பட பல அலுவலகங்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பலர் கடமையாற்றுகின்றனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கிளிநொச்சியில்கல்விகற்றுவருகின்றனர். இவர்கள் தினமும் கிளிநொச்சிக்குச் சென்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து குறுகிய தூர ரயில் சேவையை விரைவில் நடத்தவுள்ளதாகவும், அதற்கான ரயில் தயாராக உள்ளதாகவும் அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. எனவே பளை வரை நடத்தவுள்ள ரயில் சேவையை கிளிநொச்சி வரை நீடிக்குமாறு அரச, தனியார் நிறுவனங்கள், வங்கிகள் போன்வற்றில் கடமையாற்றுவோரும், பல்கலைக்கழக வளாகத்தில் கற்கும் மாணவர்களும் கோரியுள்ளனர். (த-9)

உதயன்
advt@uthayan.com
021 567 1111

விசேட வகுப்புக்கள்
சகல போட்டிப் பரீட்சைகள் மற்றும் வினைத்திறன், பதவியுயர்வு பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் தவரேசரின் வழிகாட்டலில் நடைபெறுகின்றன. தொடர்பு
075 416 4564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

தவறிவிட்டது
த. தவராஜ்பன் என்பவருடைய கடவுச்சீட்டு (இல.N 5298910) மிருசுவில்-கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
077 207 3079, 077 207 3089,
077 361 8648
எனும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (54440) (10.6)

வெளிவந்துவிட்டது
ஆசிரியர் அதிபர் சேவைக்கான புதிய பிரமாணக் குறிப்பு
1). பதவி உயர்வு
2). சம்பள உயர்வு
3). வினைத்திறன் தடைதாண்டல்
தொகுப்பு: தி.தவரத்தினம்
கிடைக்குமிடம்:
அம்பிகை புத்தகசாலை
246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 561 9294, 077 834 9507
(10.6.3)

தேவை
✓Video Editor
✓Video Graphy
✓Wedding Album Designer
✓Photography
3 வருட அனுபவம் விரும்பத்தக்கது
தொடர்பு:
076 655 7757, 021 205 8969
(54432) (10.6.3)

வேலையாள்கள் தேவை
★ பள்ளிவாசல் கட்டடம் கட்டுவதற்கு, தச்சு தொழிலாளிகள் (Shuttering) / கம்பி வேலை செய்பவர்கள் (Bar benders) / மேசன்மார் தேவை.
விவரங்களுக்கு:
021 320 2726, 077 375 1803
★ கொடிகாமம் வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு மேசன்மார் / மார்பிள் பதிக்க கூடிய மேசன்மார் / கார்பென்டர்ஸ் / பார்பெண்டர்ஸ் உடனடியாகத் தேவை.
விவரங்களுக்கு:
071 328 6711, 077 458 0461, 0773751803
(C/17738) (10.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.